# தமிழ்த் தென்றல்

ஸர்வஜித் ஆவணி

ஆகஸ்ட் 1947

8356



# தமிழ்த் தென்றல்

கொடி-க] [பூ-க

சர்வசித்து ஆவணி-க.

1662

★

ஆசிரியர்:

வே. வ. இராமசாமி

விலை அணா நான்கு

வெளி நாடு ஐந்தணா

★

உரிமை:

தமிழ்த் தென்றல் அலுவலகம், விருதுநகர்.

# தமிழ்த் தென்றல்

208356

முரசிருந்து முழங்கிற்று! "தமிழ்வாழ்க,
தமிழ்வெல்க" என்றே முன்னுள்.—பாரதிதாசன்

| கொடி—க. | சர்வசித்து, ஆவணி—க<br>17—8—1947. | பூ—க. |
|---|---|---|

கொடி—க. சர்வசித்து, ஆவணி—க 17—8—1947. பூ—க.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பணி ... ... ... | ஆசிரியர் | ரு |
| தன்னரசில் தமிழர் கடமை | கே. வீரராகவன் | சு |
| புதிய இந்தியக் காட்சி | சுத்தானந்த பாரதியார் | சா |
| அட்டைப்பட விளக்கம் | | அ |
| கடற்கரையிலே நக்கீரர் | ரா. பி. சேதுப்பிள்ளை | கூ |
| கலை வளர்ந்தது | அ. முத்துசிவன் | கரு |
| ரோஜா மலர் | ச. தங்கராசன் | கஅ |
| சித்திரச் சிலம்பு | பொறுப்பாசிரியர் | கக |
| பிணத்தில் எழுந்த பெருங்கூத்து | தெ. பொ. மீனுட்சிசுந்தரனர் | உ௫ |
| குப்பைக்குள் குபேரன் | ஈ. த. இராசேசுவரியம்மாள் | ருய |
| கடித இலக்கியம் | சுத்தானந்த பாரதியார் | ருசா |
| நீலச் சிற்றுடை | நல்லம்மா-சுப்பிரமணியம் | ருஎ |
| தாரையின் தந்திரம் | அ. தி. வீரபத்திர பிள்ளை | சாக |
| யாழ்நூல் கண்டார் பிரிவு | இராம-மீனுட்சிசுந்தரனர் | சாஅ |
| அசையாத்தமிழ் | எஸ். எஸ். அருணகிரிநாதர் | ருக |


உரையாணியும் பிறவும்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே!
கவிதை—கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு
ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# பணி

"தமிழ்த் தென்றல்" மாத சஞ்சிகை வடிவத்தில் ஆவணித் திங்கள் முதல் நாள் தொடங்கித் திங்கள்தோறும் குறிப்பிட்ட நாளில் நறுமணம்வீசி உலவிவரும். இலக்கியத் துறையிலும், பிறவழிகளிலும் மேற்கொண்ட பணியை உறுதியுடன் பணிவுடன் புரிந்து வருமென்று தமிழ் மக்களின் அன்பை ஆதரவாகக் கொண்டு உறுதி கூறுகிறோம்.

அந்நியன் ஆட்சியிலிருந்து நம்நாடு விடுதலையடைந்து விட்டது! நாட்டின் சொந்தக் கொடி உலகமறிய ஒய்யாரமாகப் பறக்கிறது! தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது! ஏன்? தன்னை அடக்கி ஒடுக்கி வைக்க ஒத்தாசையாயிருந்த வெளிநாட்டுச் சக்தி மறைந்துவிட்டது. நிமிர்ந்த தலை குனியவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையன்றோ? தமிழ் மக்களுக்கு இது ஓர் நல்ல சந்தர்ப்பம்.

தமிழ் இனத்துக்கு மாறுபட்ட வர்க்கம் இனி தலைமை தாங்கி நடத்த வழியில்லை. வழி ஏற்படாவண்ணம் உறுதிகொள்ள வேண்டும். முதன்மையாக, சகிப்புத்தன்மையுடன்—விட்டுக் கொடுக்கும் சுபாவத்துடன் எல்லோரும் ஒருங்கு கூடித் தமிழகத்தை நிலைநிறுத்திக் கொள்வோமாக! பின்னர், நாட்டின் நலனுக்காக, பொருளாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து முதலிய சாதனங்களில் நம்மைச் சார்ந்த பிறமொழி இனங்களுடன் கூடித் தக்கதோர் "கூட்டுஅமைப்பு" வகுக்க வழி ஏற்படாதா?

இவ்வகையில் தமிழ்த் தென்றல் பொதுமக்களின் விருப்பத்தை நிறைவேற்றப் பின்வாங்காது முன்னின்று பணியாற்றும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் வெல்க!

# தன்னரசில் தமிழர் கடமை

**[கே. வீ. வீரராகவன் பீ. ஏ. பீ. எல்.]**

தாய் நாடு தன்னரசு பெறுகின்றது. வீரர்கள் வெற்றிக் கொடி நாட்டி, வணக்கம் செலுத்துகிறார்கள்; விண்ணைத் துளைக்கும் வெற்றி முழக்கம் கேட்டுக் கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்க்கிறான் தமிழன். அவன் காணும் காட்சி அவனைத் திகைக்கவைக்கிறது.

“தமிழா! உன் பசி தீர்ந்ததா? பட்டினியும் பஞ்சமும் பறந்தோடி விட்டனவா? சாதி சமய வேறுபாடுகள், மதமாச்சரியப் பிணக்குகள், எல்லைச் சண்டை, மொழிச் சண்டை முதலியன ஒழிந்தனவா? உழவும் தொழிலும் உன்னத நிலை அடைந்துவிட்டனவா?” என்று கேள்விகள் சரமாரியாய் ஒலிக்கின்றன.

“இல்லை; இல்லை” என்ற பதில் எட்டுத் திக்கிலும் எதிரொலிக்கின்றன.

“பின் எதைக் கொண்டாடுகிறாய்? எதற்கு இந்த ஆடம்பரமும் அமர்க்களமும்?”

“எதையா? நம்நாட்டை நம்மவர்கள் இனி ஆள்வர்; எதற்கும் வழி ஏற்பட்டுவிடும். சுதந்திர சூரியன் உதயமாகி விட்டான். இனி நாம் கவலையுறக் காரணமில்லை. மனிதர் குலமாணிக்கம், உலகின் ஒப்பற்ற தலைவர் ஜவஹர்லால் இந்நாட்டைக் கட்டியாளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டார். ஆகவே நமக்கேன் கவலை?”

உண்மை; விழாக் கொண்டாடுவதிலும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதிலும் தமிழருக்கு இணையே இல்லை. கையிலுள்ள சொற்பக் காசையும் கரைத்து விழாக் கொண்டாடிலுல்தான் தமிழன் உள்ளம் சாந்தியடைகிறது. “கடவுள் இருக்கிறார்; படைத்தவர் காப்பாற்றாமல் ஏன் போகிறார்!” என்று பாரத்தைக் கடவுள்மேல் போட்டுவிட்டு, “சும்மா இருப்பதே சுகம்” என்று உட்கார்ந்து விடுகிறான் தமிழன்.

இன்றோ மற்றொரு காரணம் கிடைத்து விட்டது. “சுதந்திரம் வந்துவிட்டது; ஒப்பற்ற தலைவர்கள் நம்முடைய இன்னல்களையெல்லாம் தீர்த்துவிடப் போகிறார்கள்.



ஆகவே கவலையின்றிக் கைகட்டிக் காலம் கழிப்போம்” என்ற மனப்பான்மை பரவி வருகிறது.

இது சரியா? இது தகுமா? இது முறையா?

இனியல்லவா நமது வேலை ஆரம்பமாகிறது. சமூக அமைப்பையே மாற்றும் மகத்தான வேலையின் பொறுப்பல்லவா இனிநாம் ஏற்றாகவேண்டும்? இல்லாவிடில் இன்று தமிழன் தாழ்த்தப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு விடுவான் என்பதில் ஐயமே இல்லை.

மதத்தின் பேரால் தமிழன் பணம் சுரண்டப்படுகிறது; வியாபாரத்தின் பெயரால் தமிழன் பணம் வடநாட்டுக்கு வழிகாண்கிறது; மொழியின் பெயரால் தமிழன் நாட்டின் எல்லையே குறுகிவிடும்போல் காண்கிறது; அரசியலின் பெயரால் தமிழன் அந்நிய நாட்டுக்கும் அந்நிய மொழிக்கும் அடிமையாகி நிற்கிறான்; தன்னரசு நாட்டிலும் ஆங்கிலத்துக்குப் பதில் அரியாசனத்தமர்ந்து இந்தி இலங்குமே தவிர, தமிழ் தலைதூக்கி நிற்கத் தமிழன்தான் தொண்டு புரிய வேண்டும்.

இத்தனை தொல்லைகளுக்கிடையில் இன்று தமிழன் கட்சி கட்டிக் கொண்டு கிளம்புவது விந்தையிலும் விந்தை! முன்னேற்ற நோக்கம் கொண்ட எந்த இனத்தவரும் ஒன்று சேர்ந்து உடனே தமிழ் நாட்டு அரசியல், சமூக, பொருளாதார அமைப்பைச் சீர்திருத்த முயல்வது முதல் அவசியமல்லவா?

அதற்கு அடிப்படையான கொள்கை ஒன்றுவேண்டும். சமதர்மம் ஒன்றே அத்தகைய கொள்கை என்று எனக்குத் தோன்றுகிறது. இதில் வேற்றுமைகள் இருந்தாலும நமக்குள் ஆரத்தீர ஆலோசித்து, விபரமாய் விவாதித்துத் தீர்மானம் செய்வோம். சண்டை சச்சரவுகளை அழிப்போம். அறக்கொடி நாட்டி, உண்மைச் சுதந்திரக் கனல் மூட்டி, பசியால் வாடும் பல்லாயிரவருக்கு உணவையும் உணர்வையும் ஊட்டி முன்னேறுவோம்.

இதுவே தன்னரசில் தமிழர் கடமையும் உரிமையுமாகும். இதற்காக நாம் பாடுபடுவோமாக.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!!

# புது இந்தியக் காட்சி

[அருட்டிரு. சுத்தானந்த பாரதியார்]

தேனோங்குஞ் சோலைவளம் செழித்த நாடு
திருவோங்கும் தெய்வசபை யாகக் கண்டேன்
வானோங்க ஜயமுரசம் வாழ்த்தக் கண்டேன்
வன்னமணிக் கொடியெங்கும் வளரக் கண்டேன்
மானோங்குங் கண்ணாரும் வாகை யோங்கும்
மார்புடைய வீரர்தமை மருவக் கண்டேன்
ஊனோங்கும் உயிர்க்குலங்கள் உளஞ்சிலிர்க்க
உள்ளான்ம நேயத்தின் ஒருமை கண்டேன்!

இடையேவங் திடர்செய்த இருட்கு லங்கள்
இரவியின்முன் பனிபோலே விலகக் கண்டேன்
தடைகளெல்லாம் தவிடுபொடி யாகக் கண்டேன்
தாராளச் சுதந்தரமே தழைக்கக் கண்டேன்
மடமைபிணி வறுமைதுயர் மாறக் கண்டேன்
மனைதோறுங் கல்விதொழில் வளரக் கண்டேன்
கொடியகொடுங் கோலெல்லாம் குமையக் கண்டேன்
குலமொன்றாய் மாந்தரெல்லாம் குலவக் கண்டேன்!

சிங்கத்தைக் குகையினிலே செயித்த தீரர்,
தேசத்தின் சேமத்தை விலக்கக் கண்டேன்
வங்கத்தை உடைக்க வந்த திமிங்கலங்கள்
வகையின்றி வந்தவழி செல்லக் கண்டேன்
தங்கத்தை யொத்தகுணத் தருமவான்கள்,
சட்டஞ்செய் பொறுப்பெல்லாந் தாங்கக் கண்டேன்
பங்கமெலாம் விலகிநலம் பொங்கக் கண்டேன்
பாரெல்லாம் பரமனரு ளாட்சி கண்டேன்.

ஆறற்ற கடலெனவே சமய வாதம்
அத்தனையும் அருளுணர்வில் அடங்கக் கண்டேன்.
வீறற்ற சித்தாந்த விளக்கங் கண்டேன்
வேதாந்தக் குடியரசு விளங்கக் கண்டேன்
வேறற்ற மதிமயக்க வினைக ளற்றே,
விரிந்தசம ரசமெங்கும் விரவக் கண்டேன்.
பேறற்ற நற்காலம் பிறங்கக் கண்டேன்
பிறந்தபயன் இதுவென்னப் பெற்றேன் யானே.

## அட்டைப்பட விளக்கம்

தாயின் மணிக்கொடி தலைதூக்கிப் பறக்கும் இந் நன்னாளில்—ஆவணி முதல் நாளில் சஞ்சரிக்கத் தொடங்கும் "தமிழ்த் தென்றல்" முதற் சஞ்சிகையின் அட்டைப் படத்தை அலங்கரிப்பவர் சென்னைத் திருவாளர் தெ. பொ. **மீனாட்சிசுந்தரனார் எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.** ஆவர். தலையாய தமிழறிஞர்; சிறை சென்ற தேச பக்தர்; ஆங்கிலம், பிரஞ்சு, செர்மன் முதலிய மேனாட்டு மொழிகளிலும் வடமொழியிலும், தென்னாட்டு மொழிகளிலும் புலமை நிரம்பிய பலமொழிப் புலவர். பலநூறு ஆண்டுகளாகத் தமிழ் மணங் கமழும் தனிப்பெருங் குடியில் 1901-ம் ஆண்டு தோன்றியவர். தமிழ்க் கவிஞர் தனியரசராகிய திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மேற்கொண்ட காதலால் அப்பெயரிட்டுத் தந்தையாரால் அழைக்கப் பெற்றவர். வழக்கறிஞர்; பொருளாதாரத் துறை நிபுணர்; சென்னைக் கழகங்கள் பலவற்றில் அங்கம் வகித்து ஆன்ற பணியாற்றுபவர். சென்னைத் தமிழ்ச்சங்கம் நிறுவிச் செயலாற்றியவர்; விருதைத் தமிழ்க் கழகச் சிறப்புறுப்பினர்; கலையரங்கத் தலைவர்.

1944–'46, மூன்றாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கீழ்க் கலைப் பகுதித் தலைமை தாங்கி ஆட்சிக் குழுவிலும் அமர்ந்து அருந்தொண்டாற்றிப் தமிழ்க்குப் பெரும் பயன் விளாமையால் அதனை விடுத்துச் சென்னையில் தேசத் தொண்டும் தமிழ்த் தொண்டும் செய்து வருபவர். சென்னை, இலங்கை, திருவநந்தை, அண்ணாமலை நகர்ப் பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழுவில் தொடர்புள்ளவர். சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளிச் செயலாளராகப் பலவாண்டுகளாய்ப் பணியாற்றுவோர்; நூலாசிரியர்; போதகாசிரியர்; பேராசிரியர்; சிறந்த பேச்சாளர்; அழகிய எழுத்தாளர்; ஆன்றமைந்தடங்கிய வீரர்.

தமிழ் வெல்க!

# கடற்கரையிலே

## (நட) நக்கீரர்

**[ரா. பி. சேதுப்பிள்ளை]**

செந்தமிழ் நாட்டுச் சிறந்த இயற்கைச் செல்வங்களில் ஒன்று செந்தில் என்னும் திருச்செந்தூர். அதன் கடற்கரையிலே அலை பாட மயில் ஆடும். அகம் உருக அருள் பெருகும். ஒருநாள் காலைப் பொழுதிலே அக் கடற்கரையில் வந்து நின்றார் நற்றமிழ் வல்ல நக்கீரர். ஆர்வம் அவர் மனத்திலே பொங்கி எழுந்தது. அந் நிலையிற் பேசலுற்றார்.

"அருந்தமிழ்க் கடலே! உன்னைக் காணப் பெறாது பன்னாள் வருந்தினேன். ஆலவாயிற் பணிசெய்வோர் அடிக்கடி அலைவாய்க்கு வருதல் எளிதோ? ஆயினும் எந்நாளும் உன்னை மறந்தறியேன். ஐந்தாறு நாளைக்கு முன்னே உன் பெருமையை ஒரு பழைய ஏட்டிலே கண்டேன்; ஆனந்தம் கொண்டேன். உன் அலையின் அழகும், அலைவாயில் அமைந்த ஆலயத்தின் சிறப்பும், ஆலயத்தை அடுத்த மணல் மேட்டின் மாண்பும் எத்துணை அருமையாக ஒரு பாட்டிலே படம் எடுத்துக் காட்டப்படுகின்றன! அப்பாட்டின் நயங்களைச் சங்கப் புலவரும் பாராட்டினார்கள். மதுரைமாநகரில் அரசுபுரிந்த **நன்மாறன்** என்ற பாண்டியனை வாழ்த்துகின்றது அப்பாட்டு. "நன்மாறனே! நீ நெடுங்காலம் வாழ்க. கந்தவேள்வீற்றிருக்கும் செந்திலம்பதியில் உள்ள மேட்டு மணலினும் பலவாக நின் வாழ்நாள் வளர்க" என்று வாழ்த்தினான் இளநாகன்.

அவன் மதுரைப் புலவன்; மதுர மொழியன். அவன் பாட்டைக் கேட்டாயோ கடலே!*

உன்னைக் கண்டோர் எல்லாம்—உன் காற்றை உண்டோர் எல்லாம்—உன்னை மனமாரப் புகழ்ந்தனர்; வாயார வாழ்த்தினர். குமரிக் கடல் போல் நீ கொடியை அல்லை. உன் கரையில் நின்று குமுறினார் எவரும் இல்லை. தமிழகத்தில் உள்ள கடற்கரைகளையெல்லாம் நான் கண் குளிரக் கண்டுள்ளேன். பட்டினம் என்று புகழ்ப்பெற்ற காவிரிப்பூம் பட்டினத்தின் கடற்கரையை நான் அறிவேன். அங்கு மலைபோன்ற மரக்கலங்கள் அலைகடலில் நீந்தி வருவதும் போவதும் ஆனந்தமான காட்சிதான்! ஆயினும் அக் கரையில் எப்போதும் ஆரவாரம். அல்லும் பகலும் ஓயாத பண்டமாற்று. அமைதியை நாடுவார்க்கு அக் கடற்கரையில் இடமில்லை. எம் மருங்கும் பல நாட்டு வணிகர் கூட்டம்; பொருளே அவர் நாட்டம். செந்திற் கடலே! உன்னிடம் ஆரவாரம் இல்லை; அமைதி உண்டு. பரபரப்பு இல்லை; பண்பாடு உண்டு. மரக்கலத்தால் வரும் பொருட் செல்வம் இல்லை; அதனினும் மேலாய அழிவற்ற அருட் செல்வம் உண்டு.

அதோ! கிழக்கு வெளுக்கிறது. நீலவானமும் நெடுங் கடலும் நெருங்கிக் கூடுகின்ற குண திசையில் செங் கதிரோன் ஒளிவீசி எழுகின்றான். அக்காட்சியைக் கண்டு

* "வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!
......................................
நீ, நீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர்
வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே!"—புறநானூறு, 55



பறவைகள் பாடுகின்றன; மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. ஆடும் மயிலைக் காண்பது ஓர் ஆனந்தம். அணி அணியாக இம்மயில்கள் எல்லாம் கிழக்கு நோக்கி ஆடுவதன் கருத்தென்ன? செங்கதிர்ச் செல்வன்—ஞாலம் போற்றும் ஞாயிறு—உதிக்கும் அழகைக் கண்டு இவை குதிக்கின்றனவா?

அலைகடலில் உதிக்கின்ற செஞ் சுடரைக் காணும் பொழுது, ஆடுமயிலில் எழுந்தருளும் செவ்வேளின் திருக் கோலம் என் மனக்கண்ணெதிரே மிளிர்கின்றது. என்னை யாளும் ஐயனை—மெய்யனை—செந்தமிழ்ச் செல்வனை—செந்திப் பெருமானைப் பாடவேண்டும் என்று என் உள்ளம் துடிக்கின்றது. ஆனால் பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பேரொளியை எப்படித் தமியேன் பாடுவேன்? ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியை எவ்வண்ணம் எழுதிக் காட்டுவேன்? உயிர்க் குயிராய் நின்று உலகத்தை இயக்கும் தனிப்பெருங் கருணையை எவ்வாறு உணர்த்துவேன்?

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி"யாய்
அப்பெருமான் என் உள்ளத்தினுள்ளே ஒளிர்கின்றான். செந்திற் கடலில் எழுகின்ற செங்கதிர் போன்று, கோல மாமயில் மீது முருகன் குலாவுகின்றான். காணும் கண்ணுக்கு ஒளிதரும் கதிரவன் போன்று உயிர்க்குயிராக முருகன் இலங்குகின்றான். அவன் ஆட்டுவித்தால் உலகம் ஆடும். அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

ஒளிப்பிழம்பாய் விளங்கும் கதிரவன் மாமேரு மலையை வலம் வருகின்றான் என்பர். அருட்பெருஞ் சோதியாய்

இலங்கும் முருகன் உள்ளுவார் உள்ளத்தில் ஓங்காரமாய் விளங்குவான்; அஞ்ஞானத்தை அழிப்பான்; இருள் சேர்ந்த இருவினையும் ஒழிப்பான். இத்தகைய பெருமானை ஏழையேன் என் சொல்லி ஏத்துவேன்?

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே!"

என்று நித்தலும் கைதொழுவேன்.

செந்திலம்பதியைப் படைவீடாகக் கொண்ட கந்தப் பெருமானே! உன்னைக் கடற்கரையாண்டி என்பார்! அரத்தை கெடுத்து வரந் தரும் அறுமுகன் என்பார்! செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை என்பார். இன்று போலவே என்றும், ஆண்டவனே! நீ கடற்கரையில் நின்று காத்தருள வேண்டும். தமிழ் மக்களெல்லாம் நின் அடைக்கலம்," என்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, நக்கீரர் கடற்கரையை விட்டகன்றார்.

---

## சிந்தனைக்கு!

தான் அடிமைப்படுத்திய இந்திய மக்களில் பலரை, சாதி, மதம், கலை வேறுபாடின்றி "பட்டங்கள்" பல சூட்டி, உலக மகாநாடுகளில் அமரச் செய்து, 'இந்திய மணிகளைப் பார்' என்று பூரித்தான் ஆங்கிலேயன்.

"பாரத மக்கள் அனைவரும் சகோதரர்" என்று கூவி, "பட்டம் பெற்றாலென்ன? கலாசாலைப் பண்டிதன் ஆனாலென்ன? அறிஞன் ஆனாலென்ன? பக்தன் ஆனாலுமென்ன? நாடாளும் மந்திரியானாலுந்தானென்ன? பாரெங்கும் புகழ் பெற்றால்தானென்ன? பிறவியிற் பறையன்தானே என்று கொக்கரிக்கிறான்" இந்து.


எங்கும் எப்பொழுதும் எல்லோராலும் போற்றப்படும்

**சங்கு மார்க்**

**சந்தனாதி, அரைக்கீரை**

**தைலங்களை வாங்கி உபயோகியுங்கள்!**

சிரங்கு, கரப்பான் முதலிய சகல புண்களையும் குணமாக்கும் லக்ஸால் எம்மிடம் கிடைக்கும்.

**எங்கும் ஏஜண்டுகள் தேவை!**

Regd 133063

**சங்கு சந்தனாதி டிப்போ,**
**விருதுநகர்.**

---

**சுக வாழ்வு பெற**

**சிறந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்**


**உங்கள் ஜீவியத்தில்**
நீங்களே ரூ. **250, 400, 500, 750, 900**
பெற்று அனுபவிக்கலாம்.

விபரங்களுக்கு உடனே எழுதவும்.

வே. வ. இராமசாமி,
மானேஜிங் டைரக்டர்,
**ஆல் இந்தியா நாஷனல் பிராவிடெண்ட்**
**இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**
தலைமை ஆபீஸ்: **விருதுநகர்.**

தக்க கமிஷன் அல்லது சம்பளத்தில் வேலை செய்ய ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை! விண்ணப்பிக்கவும்.

அழகும் அற்புதமும் நிறைந்த
அமர்ஜோதி போட்டோ ஸ்டுடியோ
இரயில்வேபீடர் ரோடு, விருதுநகர்.
குறிப்பு:- ஆயில்கலர், வாட்டர்கலர், பெயிண்டிங்ஸ் ரோல் பிலிம் டிவளப்ஸ் அன் பிரிண்டிங், என்லார்ஜ் மெண்ட்ஸ் முதலியன.




காவி மார்க்
வீரோ சோடா
கிரஷ்
கலர்
காளி எரேட்டட் வாட்டர் ஒர்க்ஸ்,
H. O: விருதுநகர். B. O: திருநெல்வேலி ஜங்ஷன்.

# கலை பாமரர் பகுதி

**(உ) கலை வளர்ந்தது :: அ. முத்துசிவன்**

[இன்னும் கலைக்கே அடிப்படையாகவுள்ள இன்னொரு சிறந்த உண்மையையும் நாம் தெரிந்துகொள்கிறோம்]

கடவுள் உண்மையைக் கண்ட தென்னாட்டான், 'தென்னாடுடைய சிவன்' என்னும் சன்னல் வழியாக "எந்நாட்டிற்கும் இறைவன்" என்னும் பரந்த உண்மையையும் கண்டுவிடுகின்றான்.

கலையும் இப்படித்தான். கலையை ஒரு சன்னலுக்கு ஒப்பிடலாம். நாம் வாழ்கின்ற இந்த உலகத்தை வெட்ட வெளியில் நின்றும் பார்க்கலாம். சன்னல் வழியாகவும் பார்க்கலாம். கலை என்பது சன்னல் வழியாகப் பார்க்கின்ற ஒரு காரியமே. உத்தமக் கலைஞன் ஒவ்வொருவனுக்கும் ஓர் சன்னல் உண்டு. அந்த சன்னலின் வழியே அவன் உலகத்தைப் பார்க்கின்றான். வெட்ட வெளியில் நின்று பார்ப்பதற்கும் சன்னல் வழியாக நின்று பார்ப்பதற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், வெட்ட வெளியில் நின்று பார்க்கும் பார்வை பரந்த பார்வை. ஆனால் சன்னல் வழியாகப் பார்க்கும் பார்வை குறிப்பிட்ட பார்வை. ஏனென்றால் சுவரும் சன்னல் சட்டமும் சேர்ந்துகொண்டு பல திசையிலும் பார்க்க விடாதபடி தடுத்துவிடுகின்றன. ஆகவே அவைகளால் ஆன கட்டுப்பாடுகளுக்கு அடங்கியே பார்க்கவேண்டியதிருக்கிறது. அப்படிப் பார்க்கின்ற காரணத்தினாலே நமது பார்வையானது குறிப்பிட்ட பார்வையாகப் போய்விடுகின்றது.

சன்னல்—பார்வைக்கு நிகரானதுதான் கலைப் பார்வையும். ஒவ்வொரு கலைஞனுக்கும் கலைப் பார்வை என்ற சன்னல் அமைவது, அவனுடைய பிறப்பு, வளர்ப்பு, கல்வி, கேள்வி முதலிய வாசனைத் தொடர்புகளைப் பொறுத்தது. ஐந்து பேர் ஏதோ ஓர் ஆலயத்திற்குச் செல்லுகிறதாக வைத்துக்கொள்வோம். ஒருவனுக்கு அங்கே காணப்படும் சிற்பத்தில் இலயிப்பு ஏற்படும். ஒருவனுக்கு அங்குள்ள அலங்காரத்தில் இலயிப்பு ஏற்படும். வேறொருவனுக்கு அங்குள்ள காட்சிவிசித்திரங்களில் இலயிப்புஏற்படும். ஒருவன் நைவேத்திய வகைகளிலேயே உள்ளத்தைப் பறிகொடுத்து விடலாம். ஒருவனுக்கு என்றும் கிடைத்திராத ஓர் நூதன தரிசனமே கிடைக்கலாம். ஒவ்வொருவனுடைய ஈடுபாடும் அவனவனுக்கு ஏற்பட்டுள்ள இச்சை வெறுப்புகளின் நீர்மையைப் பொறுத்ததே.

கலையிலும் அப்படித்தான். ஒவ்வொரு கலைஞனும், தான் பெற்றுள்ள கலைப்பார்வை என்னும் சன்னல் வழியாக உலகத்தைப் பார்க்கும்போது சிலசில அம்சங்கள் மிக நன்றாகத் தென்படுகின்றன. அவைகளுக்குத் தன்னால் இயன்ற அளவு கல்லிலோ சொல்லிலோ வடிவத்தைப் படைத்துவிடுகின்றான். ஏதாவது ஓர் உதாரணத்தை எடுத்துக் கொண்டால் மேலே கூறியவற்றின் பொருளை நன்றாக உணர்ந்து கொள்ளலாம்.

சமீபத்தில் தமிழ் நாட்டில் திக்குவிசயம் செய்து வந்த தெலுங்குப் படம் ஒன்றை அநேக அன்பர்கள் பார்த்திருக்கலாம். நான் குறிப்பிடுகிற படம் 'சுவர்க்கசீமா' என்னும் படமாகும். 'சுவர்க்கசீமாவை' எழுதிய ஆசிரியன் தனது கலைத்திறன் என்னும் சன்னல் வழியாக இந்த உலகத்தை ஏறிட்டுப் பார்க்கின்றான். ஒரு உண்மை அவனுடைய மனதில் மிக நன்றாக உறைந்துவிடுகின்றது.



"விலைமகள் காதல் நிலையாக் காதல்
குலமகள் காதல் குலையாக் காதல்"

என்ற உண்மையே ஆசிரியன் கண்ட உண்மை. உள்ளது தானே! விலைமகளின் இயற்கை என்ன?

கண்ணே, மணியே, கற்கண்டே, கனிரசமே,
உண்ணேன், உறங்கேன், உனையன்றி ஒருவரையும்
எண்ணேன், ஏற்கேன், என்துரையே! என்றெல்லாம்
பண்ணேர் மொழிகூறிப் பரதேசி ஆக்கிடுவாள்.

இல்லையா? அதுதானே பெரும்பாலும் காணப்படுவது? பட்டினத்தடிகளும் இதுகுறித்து அழுகின்றாரே!

"நாவார வேண்டும்விதம் சொல்வாள், உனைநான் பிரிந்தால்
சாவேன்என்று இருந்துடன் உண்பாள்; கைவறண்டால்,
போய்வாரும் என்று நடுத்தலைக்கே குட்டும் பூவையர்க்கு
ஈவார் தலைவிதியோ இறைவா கச்சி யேகம்பனே"

சுவர்க்கசீமாவை எழுதிய ஆசிரியருக்கு இந்தஉண்மை மிக நன்றாகப் பதிந்து விட்டது. வேறுவிதமாகச் சொல்லுகிறதென்றால் அவருடைய கலைப்பார்வை என்னும் சன்னலின்மூலம் அவர் இந்த உண்மையைக் கண்டுகொண்டார். அப்பாலே நீங்களும் நானும் பார்த்து மகிழ்ந்த காட்சியெல்லாம் அந்த உண்மைக்குக் கொடுத்துள்ள தூல வடிவமே.

இதனை நான் இங்கே எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால், எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கு, எல்லோரும் அறிந்த ஒன்றை உதாரணமாக எடுத்துக் கொண்டால் எளிதாக இருக்குமே என்பதற்காக வேண்டி. 'சுவர்க்கசீமாவின்' ஆசிரியரை எவ்வாறு மதிப்பிட்டோமோ அவ்வாறே பெரியபெரிய கலைஞர்களையும் மதிப்பிடலாம்.

கவிஞர் கம்பரை எடுத்துக்கொள்வோம். அவருடைய கலைப்பார்வை என்ற சன்னலின்மூலம் அவர் எதைக் காண்கின்றார்என்றால்: விதியின் கொடுமையை—மனிதன் எத்தனை ஆற்றல் வாய்ந்தவனாக இருந்தாலும்சரி; அவன் வானத்தை வில்லாக வளைக்கட்டும்; அல்லது மணலைக் கயிறாகத் திரிக்கட்டும்; இன்னும் சலத்தின்மேல் நடக்கட்டும்; கனலின் மேல் இருக்கட்டும்; கட்செவியை எடுத்து ஆட்டட்டும்; கரடி வெம்புலி வாயையுங் கட்டட்டும்; கேவலம், விதியின் கையிலகப்பட்ட பொம்மை; அதைத் தவிர வேறு இல்லை என்பதை அவர் நன்றாகத் தெரிந்துவிட்டார்.

"சூழ்வினை நான்முகத் தொருவர் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?"

என்று மகரிசி வாயிலாக நமக்கு உணர்த்துகின்றார். பிரமதேவன் நினைத்தாலும் விதியை மாற்றமுடியாதென்றால் அப்பால் விதியின் கொடுமையை என்ன சொல்வது?

கவிஞர் பாரதிதாசன் தமது கலைப்பார்வையாகிய சன்னலின்வழியே தமிழ்நாட்டைப் பார்க்கின்றார். "என்னடா அநியாயம், 'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' என்றிருக்க, மக்கள் தாங்கள்செய்யவேண்டிய தள்ளவொண்ணாக் கடமைகள் எத்தனையோ உண்டு. அவைகளைச் செய்யாது, சும்மா, தெய்வம் தெய்வம் என்று பிதற்றிக் கொண்டு, பொழுதையும் பணத்தையும் போக்கிக் கொண்டிருக்கின்ற நிலையல்லவா தென்படுகின்றது" என்பதாக அறிகின்றார்.

"சீரங்க நாதனையும் தில்லைநட ராசனையும்
பீரங்கி வைத்துப் பிளந்தெறிவ தெந்நாளோ"

என்று அவருடைய இதயம் பிளிறுகின்றது. அப்போது தான் நல்லகதி பிறக்கும் என்பது அவருடைய நம்பிக்கை.



சிவமணம் கமழும் பாக்களைப் பாடிய சேக்கிழார் தமது கலைப் பார்வையாகிய சன்னலின் வழியே உலகத்தைப் பார்க்கின்றார். சேரமான் பெருமாள் நாயனாருடைய குறிக்கோளே அவருடைய குறிக்கோளும் என்பது நன்றாகத் தெரிகின்றது. "மனிதன் பொருளென்றும் துணையென்றும் தேடுவது உண்டானால், உலகத்தில் ஒன்றே ஒன்றுதான் உண்டு. அது ஒன்றே தேடும் பொருள். இன்னும் அது ஒன்றே தேடும் துணை. அதுதான் தில்லையம்பலத்துள் ஆடுகின்ற கழல்" என்ற உண்மையைக் கண்டுவிடுகின்றார்.

"நீடும் உரிமைப் பேர்அரசால்
நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும்
தில்லைத்திருச் சிற்றம்பலத்துள் ஆடுங்கழலே"

அவர் பாடிய பெரிய புராண நூலை, மேலே காட்டிய உண்மையைப் பிரதிட்டை செய்வதற்காக எழுப்பிய கோயில் என்றே கூறிவிடலாம்.

இப்படி ஒவ்வொரு கவிஞனும் அவனுடைய பிறப்பு, வளர்ப்பு, வாழும் சூழல், கல்வி, கேள்வி ஆகிய வாசனைத் தொடர்புகளால் ஒருவிதமான கலைப் பார்வையைப் பெறுகின்றான்; அதனையே சன்னலாகக் கொண்டு தன்னைச் சுற்றியிருக்கும் பிரபஞ்சத்தையும் அதனுள் புதைந்து கிடக்கும் மர்மங்களையும் காண்கின்றான். கண்டவைகளுக்கு அவனுடைய திறனுக்கு ஏற்ப நாமமும் ரூபமும் கற்பித்து நம்மை ஈடுபடச் செய்கின்றான். * * *



# ரோஜா மலர்


[ச. தங்கராஜன்]

சிதைக்கும் முட்கள் நடுவினிலே
சிரித்துக் களிக்கும் நறுமலரே
வதைக்கப் பட்டு வாழ்விழப்பாய்
வாழ்வு வந்த நாளினிலே!

மென்மை இதழ்கள் சிவப்பினிலும்
மினுங்கிச் சிணுங்கும் நேர்த்தியிலும்
வண்மைத் தளிர்கள் பசுமையிடை
வனப்பு மிகுந்திடு மணமலரே!

குளிர்ந்த காலையில் மலர்ந்திட்டாய்;
குளுமை நிறைந்து குலுங்கிட்டாய்;
ஒளிந்து மறைந்து கிடந்தாலும்
உனது கந்தம் மறைந்திடுமோ?

சிலவாம் நேர வாழ்விடையே
செழிப்பாய்ப் புகழிற் சிறந்தனையே!
பலவாங் காலம் வாழ்ந்திடினும்
பயனேன் பலருக் குதவாதார்?




[அ. இராசகோட்டியப்பன்]

## முன்னுரை

சித்திரச் சிலம்பு—அழகிய சிலம்பால் விளைந்த கதை. கண்ணகி—கோவலன் கதை பழந்தமிழ்க் கதை. கண்ணகியின் சிலம்பை விற்று வாணிபம் செய்து பொருள் ஈட்டக் கருதிக் கோவலன் மதுரைக்கு வந்தான். மனைவியுடன் வாழவந்த இடத்திலே மனைவியைப்பிரிந்து மாளநேர்ந்தது. கணவன் இறந்த செய்தியைக் கண்ணகி கேள்வியுற்றாள். மனம் துடித்தாள். தன் கால் சிலம்பை விற்கச் சென்ற கணவனைச் "சிலம்பு திருடிய கள்வன் என்றெண்ணிக் கொற்றவன் கொன்றான்" எனக் கேட்டுக் குமுறினாள்; அடங்காச் சினம் கொண்டாள். "அரசன் அநீதி இழைத்தான்; அநியாயம் செய்த அரசாங்கத்தை அடியோடு அழிப்பேன்" என்று மதுரை வீதி வழியே சபதம் கூறிக் கொண்டு சென்று அரண்மனை வாயிலை அடைந்தாள். வாயிற் காப்போனிடம், "அறிவிழந்த அரசன்பால் என் வரவு தெரிவி" என்றாள்; அரசவையில் நின்றாள். அரியாசனத்தில் வீற்றிருந்த அரசன் முன் தன் வழக்கைத் தானே எடுத்துரைத்தாள். பாண்டியன், கோவலன் கொணர்ந்த சிலம்பைக் கண்ணகி முன் வைத்தான். தன் வாழ்வை இழப்பித்த அந்த இழவுச் சிலம்பை—தன் கணவனைக் கள்வன் என்று காட்டிக் கொடுத்த அந்தச் சதிகாரச் சிலம்பை—முறை தவறாத செங்கோல் வேந்தனைப்

பழிகாரனுக்கிய அந்தப் படுபாவிச் சிலம்பைப் பார்த்தாள். இரத்தம் கொதித்தது. அருள் ஒழுகிய நெஞ்சிலே அனல் பொங்கியெழுந்தது. சிலம்பை நொறுக்கினள். மாணிக்கப் பரல் தெறித்தது. அரசன் அஞ்சினன்; அறிவிழந்தான். "யானே கள்வன்" என்று அரற்றினன். அரியாசனத்தினின்று மயங்கி வீழ்ந்து மாண்டொழிந்தான். கண்ணகி சபதம் பலித்தது.

பாஞ்சாலி சபதத்தில் பறிபோன பாரதியின் நெஞ்சைக் கண்ணகியின் சபதம் கவ்வி யள்ளிக் கொண்டது! "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று நெக்குருகிப் பாடினர். சேரன் தந்த சிலம்புச் செல்வம் செந்தமிழ் நாட்டின் அழியாச் செல்வம் என ஆய்ந்துணர்ந்து, "சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என வாயாரவாழ்த்தினர். கண்ணகி, வழக்குரைத்து வழக்கு வென்று வஞ்சினம் முடித்த வலிமைக்குத் தலை வணங்கி, "பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!" என்று வெற்றி முரசு முழக்கி வெறியாட்டு விளைத்தார்.

சேரன் செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ. முத்தமிழ்ப் புலமையும் முறையரசுரிமையும் இத்தலத்தில் எய்திய இறைமகன்; முற்றத் துறந்த முனிவர்; அரச நீதியெல்லாம் ஆராய்ந்து அறிந்த பேரறிஞர்; துலைநா வன்ன தோலா நாவினர்; முடியுடை மூவேந்தர் குல முறை உணர்ந்த கோமகன்; தமிழ்நாட்டு வரலாறும், தமிழர்ப் பண்பாடும், தமிழ்ப் பரப்பின் கண்டா வளமும் வாயூறிப் பாடும் வல்லாளர். அநீதி இழைத்து மானமழிந்த அரசாங்கத்தை அறக் கடவுள் பெண் கோலம் தாங்கி வந்து மண்கோலமாக்கிய மாயக் காட்சி, பற்றறத் துறந்த இளங்கோவடிகளின் உள்ளத்தைப் பற்றிக் கொண்டது.



சிலம்புக் காப்பியம் பிறந்தது. தெளிந்த நடை; இனிய சொல்லொழுக்கு; சிறந்த எழுத்தோவியம்; கற்பனையூற்று; கலைஞர் கற்பகம்; கவிஞர் பூம்பொழில்; முத்தமிழ் வைப்பு. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரச் சித்திரங்கள் செந்தமிழ் மொழியின் வைரச் சுரங்கங்கள்.

— ௩ —

## மங்கல வாழ்த்து

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைச் சித்திரிக்கத் தொடங்குகின்றார்: "சோழன் குடையைப் போலத் தண்ணிலாப் பொழியும் திங்களே போற்றி! சோழனது சக்கரம்போலச் சுழலும் ஞாயிறே போற்றி! சோழனது முறையரசு போல நிறைவளம் சுரக்கும் மாமழை போற்றி!" என்று இயற்கையழகில் இறைமைத் தன்மையைக் கண்டு வியந்து பாராட்டிப் பரவுகின்றார். "சோழர் குலம் உள்ளளவும் அதனைப் பாடும் புலவர் புகழ்ந்து பாடும் பொலிவு நிரம்பிய பூம்புகார் போற்றி!" என்று பூம்புகார்ப் பட்டினத்தையும் போற்றுகின்றார்.

இக்காலத்தில் 'பட்டணம்' என்றால் சென்னப் பட்டணம். அதுபோல, அக்காலத்திலே 'பட்டினம்' என்று காவிரிப்பூம் பட்டினத்தை அழைப்பது வழக்கம். காவிரி கடலுடன்கலக்கும் இடத்தில் அமைந்த அப்பட்டினத்தைப் 'பூம்புகார்' என்றும் புகல்வர். சோழர்க்குத் தலைநகராகவும்

துறைமுகமாகவும் விளங்கிய அந் நகரம் பொன்னகரம் எனப் பொலிந்தது. அதில் வணிகர் மரபிலே மாநாய்கன், மாசாத்துவான் என இருவர் அரசர் மதிக்கும் வரிசைபெற்ற பெருஞ் செல்வராய் விளங்கினர். வாணிகச் சாத்தினால் வளம் படைத்தவன் மாசாத்துவான்போலும். தரை வழி வாணிபத்திற்குச் சாத்து என்று பெயர். மரக்கல வர்த்தகத்தில் பெரும் பொருள் ஈட்டியவன் மாநாய்கன்போலும்.

மாநாய்கன் மகள் கண்ணகி; பன்னிரண்டு ஆண்டு எய்திய அப்பாவை,




"போதிலார் திருவினாள்
புகழுடை வடிவு; என்றும்
தீதிலா வடமீனின் திறம்
இவள்திறம் என்றும்
மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்றும்
கண்ணகி என்பாள்மன்னோ"

செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் அழகு இவள் அழகுக்கு ஒப்பாகும்; அருந்ததியின் கற்பு இவள் கற்புக்கு ஒப்பாகும்' என மங்கையர் மகிழ்ந்து வணங்குமாறு பெருங் குணங்கள் எல்லாம் இவளிடம் குடிகொண்டு விளங்கின.




செழுங்கிளை தாங்கிய செல்வர் தலைவன் மாசாத்துவான்; அவன் மகன் கோவலன்; பதினாறு ஆண்டு வாய்ந்த காளை.



"மண்தேய்த்த புகழினான்;
மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த புகழினர்
ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள் என்று
இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான்
கோவலன் என்பான்மன்னோ"

"பூமி சிறிது; இவன் புகழ் பெரிது; 'அழியா அழகும் குறையா இளமையுமுடைய இக் கட்டழகன் நாம் வணங்குதற்கு உரியோன்' என இசையினுமினிய சொல்லினையுடைய பெண்கள் கூடி பேசிப் புகழும் கட்டழகன்; திருமகள், கலைமகள், சயமகள், புகழ்மகள், நிலமகள் ஆகியோர் முறையே இவனே அழகன்! அறிஞன்! ஆண்தகை! புகழாளன்! பொறுமைசாலி!" என மனமகிழ்ந்து வாழ்த்தும் வள்ளல்.

மாநாய்கனும் மாசாத்துவானும் ஒருநாள் ஒருங்குகூடி கண்ணகிக்கும் கோவலனுக்கும் மணம்செய்விக்கக் கருதினர். உடனே அழகிய பெண்கள் சிலரை யானைமேல் ஏற்றித் திருமணச் செய்தியை ஊரார்க்குத் தெரிவிக்கச் செய்தனர்.



"யானை எருத்தத்து அணியிழையார் மேல்இரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்"

திருமணநாள் நெருங்கிற்று! முரசுகள் முழங்கின! முருடுகள் அதிர்ந்தன! சங்குகள் ஒலித்தன! எங்கும் வெண்குடைகள்! ஊர் முழுதும் மங்கல அணிகள்! வயிரக்கால் நிறுத்திய மணிமாடத்தில் நீலவிதானத்தின் அடியில் அமைந்த முத்துப் பந்தலின் நிழலின் அமைந்த மணவறையில் மணமக்கள் வீற்றிருந்தனர். 'மனம் ஒத்த வாழ்க்கைத் துணைவர் ஆயினோம்' என ஆன்றோர் அவையில் உறுதி தந்தனர். திருமணத்தைக் கண்டோர், 'கண் பெற்ற பயன் கொண்டோம்' எனக் கொண்டாடினர். **மங்கல மங்கையர் சூழ நின்று, "இவர்கள் இணை பிரியாது வாழ்க" என வாழ்த்தினர்;** பூமழை பொழிந்தனர்.

---

Tel:- FLOWERS உத்தரவாதம்

★ துணிகளுக்கு ★

அழகிய அச்சு சாய வேலைகளுக்கு

**(FLOWERS)-"ப்ளவர்ஸ்"**

க்ளாத் பிரிண்டிங் அன் டையிங் ஒர்க்ஸ்,
25, மாதா கோவில் வீதி,
பாண்டிச்சேரி.

**Pro: R. S. T.** மூர்த்தி (தமிழ்த் தென்றல் ஏஜண்ட்),
புஷ்பம் ஸ்டோர்ஸ், நெ. 24, துய்ப்ளெக்ஸ் வீதி,
பாண்டிச்சேரி.

விருதுநகர்

# ராஜன்

# சோப்பு

உபயோகித்திருக்கிறீர்களா?

**தி இந்தியன் பாங்க் லிமிடெட்**
தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
வடக்கு பீச்ரோடு, மதராஸ்.

மதராஸ் ஆபீசுகள்:— எஸ்பிளனேட், எழும்பூர், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, மயிலாப்பூர், தியாகராய நகர் மற்றும் புரசைவாக்கம்.

சென்னை ராஜதானியின் எல்லா இடங்களிலும், பம்பாயிலும் கிளைகளும் சப் ஆபீசுகளும் உண்டு.

அயல் நாடு கிளைகள்:- கோலாலம்பூர், பினுங்கு, சிங்கப்பூர்.

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | ரூ. 62,00,000 |

சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்கப்படும்.
விபரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது விண்ணப்பிக்க.

**என். கோபால அய்யர்**, காரியதரிசி.

ரிஜிஸ்டர் நீர். 124813. ஸ்தாபிதம் 1941.

**ஸ்ரீ அம்பாள் காபி**

சில்லரைக்கும் மொத்தமாகவும் கிடைக்கும்.
**ஸ்ரீ அம்பாள் காபி ஒர்க்ஸ்,**
தெப்பக்குளம் தென்பஜார், விருதுநகர்.

# பிணத்தில் எழுந்த பெருங்கூத்து

[பலமொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்]

ஆண் மகன் கீழே வீழ்ந்து கிடக்கின்றான். அறிவு ஒளி, இன்ப வெள்ளம், உண்மையின் உறுதி—இவை அனைத்தும் அழகினமைதியாய் அவன் வடிவில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன. உறக்கம்: பேருறக்கம் — ஆம் இறந்து கிடக்கின்றான். உயிர் போய்விட்டது; நெஞ்சின் துடிப்பு நின்றுவிட்டது. ஆனால் உடலம் இன்னமும் குளிர்ந்து போகவில்லை. அழகின் மென்மை அங்கே புன்னகை புரிகின்றது. இந்த வெள்ளை மகன் மேலே ஒரு கரிய நங்கை நின்று இன்பக் கூத்து ஆடுகின்றாள். பிறந்த வடிவமாய்ச் சிறந்து விளங்குகிறாள். ஆடுகின்ற பாம்பினை ஓடிப் பிடித்து உவந்தணியும் இளமையின் வீறு—எலும்புக்கும் உயிர் கொடுக்க முந்தும் உழைப்பின் உறுதி—படைப்பின் பெருமை—காப்பின் திறமை—தனக்கென ஒன்றின்றித் தன்னிழலில் திளைத்து எழுந்து அனைத்தையும் வாரி இறைத்து முனைந்து நின்று வினை செய்யும் கடுமை—அக்கடுமையில் ஒரு கொடுமை—எல்லாமாய் வளர நிற்கும் செழுமை—வளர்ந்தபின் பல்கிப் பரவநிற்கும் கொழுமை—இளைப்பும் களைப்பும் இல்லாத உடற்கட்டு—அனைத்தினையும் அடக்கியாளும் உயிருக்கம்—இதில் ஓர் இறுமாப்பு—காணக் கிடையாத களிப்பு—இத்தனையும் கடவுள் உருவம் பெற்று விளங்குவது போன்ற தோற்றம்—இதுவே நாம் காணும் காட்சி. இறந்து ஒழிந்து ஓடாய் எலும்பாய்த் தோலாய்க் கிடப்பவற்றை எல்லாம் அணியணியாய்ப் புனைந்துகொண்டு

ஆடுகின்றாள் அவள். இந்தத் திருக்கூத்தினை என்னென்பது? பேயாட்டமா? இல்லை: போராட்டம். இராமகிருஷ்ணர் இந்த வடிவில் ஈடுபட்டுத் தம்மையும் மறந்து நிற்பாராம். உலகினையும் அதற்கு அப்பாற்பட்ட உண்மையினையும் அங்கு காண்பாராம். சிந்து என்ற பேராற்றங்கரையில் மண்மூடிக் கிடந்தொழிந்தது ஒரு பழைய தமிழ் நாகரீகம்; அந்த முகிஞ்சதரைப் (Mohenjedaro) **பண்பாடாம்.** இந்த அம்மைத் திருக்கோலத்தில் வேரூன்றிப் பழுத்ததாம். ஆதலின் இந்தக் காட்சி பழந்தமிழ்க் காட்சியே ஆம்.

இது மாறி வேறோர் வடிவம் தோன்றுகிறது. கட்டழகும் கட்டிளமையும் களித்துக் கூத்தாடும் உடலமைதி பெற்ற ஆண்மகன் நடந்து செல்கின்றான். முன்னர்ச் செத்துக் கிடந்தவன்தான். இதோ எழுந்து நடக்கின்றான். இவன்முகத்தில் கவலை நிழலிடக் காண்கிறோம். எத்தகைய கவலை? கைசிறந்த ஓவியப் புலவன் ஓவியம் எழுதுவதில் தன் மனமெல்லாம் ஒருமுகப்பட்டுநின்று உள்ளக்காட்சியை உள்ளது உள்ளவாறு புறத்தே தீட்டுவதில் கண்ணும் கருத்துமாய்க் கவலை கொள்வது போன்ற காட்சி. ஆம், படைப்பில் முறுகி வளரும் கவலை. அம்மட்டே. இவன் தன் தோள்மேல் எதனையோ தூக்கிச் செல்கின்றான். முன்னர் இன்பக் கூத்தாடிய இளமங்கையின் உடலம்தான் அது. ஐயம் இல்லை. அழகும் இன்பப் பொலிவும் இன்னும் மாறவில்லை. ஆனால் இறந்த பிணந்தான். செத்தவன் பிழைத்தான்; பிழைத்தவள் செத்தாள். அழுகைச்சுவை ஊற்றெடுக்குமிடம் இந்தக் காட்சியன்றி வேறுஏது. ஆனால், மறித்தும் பார்ப்போம். என்ன தோன்றுகின்றது? இவன் முகத்தில் ஓர் உறுதி—அந்த உறுதியில் ஓர் உவகை—அந்த உவகையில் வளர்கிறது ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்



கையிலிருந்து பொங்கி வரும் அறிவு வெள்ளத்தில் மூழ்கி நாமும் இன்புறுகின்றோம். "பழையபடி அவளைக் கூத்தாட வைப்பேன்" என்பது போல நடக்கின்றான். "உயிர் கொடுத்து ஆடவைப்பான்" என்று நாமும்கிடக்கின்றோம்.

இவை எல்லாம் என்ன? பலவகையான விடுகதைகளில் இதுவும் ஒன்று. உலகம் ஒரு புதிர். அதனை அறிவார் யார்? "யார் அறிவார் அதன் அகலமும் நீளமும்" என்கின்றார் திருமூலர். அறிய முடியாததனை அறிய முனைகிறது நம் மனம். கொசுகு தன் வாலால் அண்டத்தினை அளக்கப் பார்க்கிறது. அளந்தறியவும் செய்கிறது. ஆனால் அதனை எப்படிப் பிறருக்கு எடுத்துச் சொல்வது? அறிந்தது கொண்டே அறியாததனை விளக்குதல் வேண்டும். கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத காதலைக் காதலன் எவ்வாறு புலப்படுத்துகிறான்? "முத்தன்ன வெண்ணகை" எனப் பாடுகிறான். "பல் உருண்டையா?" என்று கேட்பாரில்லை. காதலியின் அழகு; அவன் கொண்ட ஈடுபாடு பெருமதிப்பு, காதல்—அத்தனையும் ஒருவாறு வெளியாகின்றன. சொல்லியது கொண்டு சொல்ல முடியாததனை அறிகின்றோம். அப்படிப்பட்ட பேச்சுத்தான் நாம் மேலே கூறிவந்ததும். உலகின் அடிப்படையை ஒருவாறு அறிந்த அறிஞர் கண்ட காட்சியே மேலே நாம் கண்ட காட்சி.

பச்சைப் பசேர் என்ற பைம்புற் பரப்பு—பொன் எனப் பொலிந்து செல்வச் செருக்கால் கூத்தாடும் நெல் வயல்—இருண்டு செறிந்த பெருங்காடு—இங்கெல்லாம் என்ன காண்கின்றோம்? செடியின் வித்து எங்கே? மரத்தின் விதை எங்கே? மண்ணின் கீழே நனைந்து வீங்கித் தலை வெடித்துச் செத்தது. ஆனால் அடியோடு ஒழிந்தபாடில்லை. வேர்க் கிழங்காய் நின்று முளைவிடுகிறது. அதன் சாவிற்

பிறந்ததே புதிய செடி; புதிய மரம். அதுவே இன்றும் அடிப்படையாய் வீற்றுக் கிடக்கின்றது. மேலே பூவும் காயும் கனியும் பருப்பும் கிளையும் இலையுமாய்த் தழைத்துத் திளைத்தாடும் இன்பக் கூத்து; அழகிய கரு நங்கையின் அருங்களி நடம். கீழோ அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் வித்தின் செத்த பிணம்; அனைத்தினையும் ஆளும் ஆண்மையின் சாவு. சிவத்தினைப் பிணமாக்கி ஆற்றலம்மை (சக்தி) இயங்கி ஆடுகின்ற ஆட்டம் இவ்வாறு எங்கும் உண்டு. என்றும் மாறா இயக்கமே உலகின் வடிவம். ஆற்றலம்மை ஓர் இயக்கியே.

ஆனால் ஒருநாள் நெற் பயிர் மறைகிறது; புல் மறைகிறது; காடு மறைகிறது; பழைய மரமும் பட்டுப்போகிறது. அப்போது ஆற்றலின் அழகுக் கூத்தினைக் காணோம். அனைத்தும் அழிந்ததோ? இல்லை. வித்தே சிவமாய் ஒடுங்கி நிற்கிறது. மேலுள்ள ஈரத் தோலும் வறண்டு சுருள்கிறது; பசையற்றுச் சாகிறது. பசையற்ற தோலைச் சுமந்து திரிகிறது வித்து. இன்பக் கூத்தோ? எல்லாம் உள்ளே செத்துக் கிடக்கும். சிவபெருமான் செத்தவனைத் தோள் மேலிட்டுத் துணிந்து செல்லும் காட்சியே இங்கு உண்டு.

செடி கொடிகளிடத்தில் மட்டுமா இந்தக் காட்சி தோன்றுகிறது? உலகில் எல்லாத் துறையிலும் இந்தக் காட்சியைக் காணலாம். மொழித்துறையிலும் காணலாம். பேசும் மொழிகளாய்ப் பேரும் புகழும் பெற்றவற்றிற் பல பேச்சொழிந்து மறைகின்றன; செத்த மொழியாக மாறுகின்றன. வேறு மொழிகள் அவற்றினின்றும் கிளைத்தெழுந்து இன்பக் கூத்தாடுகின்றன. பழைய கிரேக்கு மொழி எங்கே? **லத்தீன்** எங்கே? **கூதிக்** எங்கே? **சம்ஸ்கிருதம்** எங்கே? இவை அனைத்தும் செத்தொழிந்தன.



இவற்றில் கிளைத்தெழுந்த மொழிகளே இன்று உலகினர் பெரும்பாலும் பேசுகிற தாய்மொழிகளாம். சாவு என்றால் அடியோடு மறைதல் என்பதன்று பொருள். இவற்றை இன்றும் காணலாம். எங்கே? கல்லறையில்! எந்தக் கல்லறையில்? நூல்கள் என்ற கல்லறையில். பெரியோரது உடலம் செத்தாலும் அழுகாது அழகாக விளங்குமாம். அத்தகைய நிலையில் செத்த மொழிகளின் சமாதிகளைக் காணலாம்; கூடிக் குலாவலாம். பின் என்ன குறைவு? பேச்சென்ற உயிர்தான் இல்லை. அதனாலேயே "செத்த மொழி" எனப் பேசுகின்றோம். செத்தோரை மங்கல வழக்காக "இறைவன் திருவடி நீழலை அடைந்தனர்" "வீரத்துறக்கம் சென்று தேவராயினர்" என்றெல்லாம் பேசுவது போலச் செத்தொழிந்த வடமொழியினையும் "தேவ பாடை" என்று பேசுகின்றோம். மேலே கண்ட அம்மையின் திருக்கூத்தில் செத்த மொழியே சிவமாம்; பேசும் மொழியே அம்மையாம். அம்மையின் ஆயிரம் பேர்களில் "தாய் மொழியே தருவடிவாய்த் தழைக்கின்ற தனித்தாயே" என்பதும் ஒரு பெயர்.

வடமொழி முதலிய செத்த மொழிகளின் மேல் ஏறி நின்று அவற்றின்உயிரனைத்தினையும் உறிஞ்சிஉறிஞ்சி உரம் பெற்று உலகெலாம் வாழ இன்பக் கூத்தாடுகின்றாள் தமிழ்த் தாய். நம்முடைய நாவில் நடமாடுகின்றாள். நம்முடைய உள்ளத்தினையே ஒரு பெருங் கோயிலாகக் கொண்டு ஆடுகின்றாள்; பாடுகின்றாள். அறிவோமா இந்த உண்மையை. காண்போமா இந்தக் காட்சியை. சித்தத்தினுள்ளே சிவம் காட்டும் இந்தக் காட்சியைக் கண்டு களிப்போமா?

# குப்பைக்குள் குபேரன்

[பேராசிரியை திரு. ச. த. இராசேசுவரி அம்மையார்]

**நம்முடைய நரகம்:** நம்முடைய நகரங்களைக் கண்டதும் நரகத்தின் நினைவு வருகிறது. நெருக்கம், புழுக்கம், புகை, புழுதி, தும்பு, தூசு, குப்பை, கூளம், சாக்கடை வெள்ளம்—இவையே எங்கும் காட்சி அளிக்கின்றன. நம் நகர வாழ்க்கையின் பெருமை சிலபோது நன்கு விளங்குகிறது. குப்பைக்காரர்களின் வேலை நிறுத்தத்தின்போது நகரத்தினைப் பார்க்க வேண்டுமே! தேரும் திருவிழாவுந்தான்—எந்தக் கடவுளுக்கு? "உச்சிஷ்டப் பிரம்மத்திற்கு"—எச்சில் ஆண்டவர்க்குத்தான்.

**எச்சிலே இறைவன்:** "உச்சிஷ்டம் பிரம்மம்" எச்சிலே இறைவன்" என்பது அதர்வண வேதம். மெய்ஞ்ஞானம் அன்று கூறியதனை, விஞ்ஞானம் இன்று விளக்குகிறது. குப்பைக்கும் கும்பிடா? ஆம், குப்பன் என்பது அக்கடவுளின் பெயர். பல முறை குழவிகள் செத்த பின்னர்ப் பிறக்கும் குழவி சாவிற்குத் தப்பிப் பிழைப்பது இக்கடவுளின் வழிபாட்டின் வழியே குப்பு என்று பெயர் பெற்றால்தான்.

**எச்சில் புராணம்:** எச்சில் ஆண்டார் புராணம் ஒன்று உண்டு.

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

என்று இந்த ஆண்டவனைப்பற்றியும் பாடலாம்.



பஞ்ச பூதத்தைப் பாழாக்குவாரே நெஞ்சீரமில்லாத அசுரராம். யார் அந்த அசுரர்? நம்மையன்றி பிறர் யார்? இறைவன் இல்லாத இடமில்லை; ஐம்புலனுக்கும் இன்பந்தரும் பொருள்களாய் எங்கும் பரந்து கிடக்கின்றான். அனைத்தையும் எச்சிலாக்கிக் குப்பையிற் கொட்டி அழுக வைக்கின்றோம். வெண்ணெய்க்காடும் பெருமாள், அம்பலக்கூத்தன் முதலிய கடவுள் வடிவங்களைச் சிற்பிகள் செதுக்குகின்றார்கள். எச்சிலாண்டாரின் பல வடிவங்களையும் புழுக்கப் புழுக்கச் சமைப்பவர் நம்மையன்றி யாரும் இல்லை. பஞ்ச பூதத்தில் முதல் பூதமாம் மண் எல்லாம் குப்பை மேடாம். குப்பையாண்டார் வடிவம் இது. இரண்டாம் பூதமாம் நல்ல நீர் எல்லாம் சிறுநீரும் உமிழ்நீரும் கழுநீருமாய், சாக்கடையிற் பாய விடுவோம். சாக்கடை ஆண்டாரின் கரு மாணிக்கத் திரு அருள் வெள்ளம் இது. தீயும் காற்றும் வானமும் நமக்கு அப்பாற்பட்டவை. இருந்தாலும் வீட்டிலும் தொழில் நிலையங்களிலும் ஏதேதையோ பற்ற வைத்து நெருப்பாக்கி நச்செலாம் புகையக் காற்றில் பரப்பி வானத்திற் கரைய விடுகிறோம். புகைக்கூண்டில் புகைஆண்டாரின் பெருமை எல்லாம் பார்க்கலாம். அடியில் தீயாய், இடையில் புகைக் காற்றாய், முடியில் வானத்தோடு வானமாய்—இவ்வாறு மூவடியால் மூவுலகினை அளக்கும் புகையாண்டாரின் திருவிக்கிரம அவதாரத்தை இன்றும் காணலாம்; என்றும் காணலாம்.

**எச்சிலார் திருவிளையாடல்:** புராணம் இன்னும் முடியவில்லை. கடவுளர் உலகமெல்லாம் இங்கும் உண்டு. குப்பை மேடே கைலாயம். சாக்கடையே கரும்பாற்கடல். புகைக் கூண்டே சத்திய லோகம். கோயிலும் இங்கு உண்டு. குப்பைத் தொட்டியே திருமூலட்டானம்;

சாக்கடைக் கால்வாயே திருமஞ்சன மண்டபம்; புகை போக்கியே யாக சாலை. பாண்டியனிடம் மாற்றால் அடியுண்டு கண்ணப்பர் எச்சிலில் மூழ்கி, பாம்புகக்கிய நஞ்சை உண்ட வரலாறு இங்கும் உண்டு. குப்பை மேட்டில் விளக்குமாற்றுத் திருவிளையாடலைக் காணலாம். சாக்கடையில் புழு அப்ப நாயனார் புராணம் கேட்கலாம். புகைக் கூண்டில் நஞ்சுண்ட சருக்கம் ஓதலாம்.

**பிடித்து வைத்தால் பிள்ளையார்:** இப்படிக் குப்பையை ஆண்டவர் எனப் பேசுவதுதானா விஞ்ஞானம்? ஆம், அதுதான் விஞ்ஞானம். அதுதான் மெய்ஞ்ஞானம். எங்குமிருக்கும் கடவுள் எச்சிலில் இருக்காமல் போவாரா? எங்குமுள்ள பொருள்தான் எச்சிற் குப்பையிலுமுள்ளது. குப்பை என்றால் என்ன? இருக்க வேண்டிய இடத்தில் இல்லாத பொருளே எச்சில். கொள்ளத் தகாத இடத்தில் குவிவதே குப்பை. அதனாலேயே தள்ளத் தக்க பொருளாகிறது. சட்டியும் பானையும் உலைக்களத்தில் குப்பை. உளியும் வாளும் சமையல் அறையில் குப்பை. வேண்டிய இடத்தில் வேண்டிய பொருளை வைத்தால் குப்பை ஏது? குப்பையை மாற்றி வைத்தால் கும்பிடு பொருளாகும். "பிடித்து வைத்தால் பிள்ளையார்; வழித்து எறிந்தால் சாணி." பிடித்து வைக்கத் தெரிந்த மேல் நாடு உலகினை ஆளுகிறது. வழித்து எறிய மட்டும் அறிந்த நாம், "தீண்டக்கூடாது; இதைத் தொடக்கூடாது. தீட்டு—ஒட்டிக் கொள்ளும்; சைவம் கெட்டுப்போகும்" என்று பாடிச் சோற்றுக்குத் தாளம் போடுகிறோம். மலமே எருவாய் மருக்கொழுந்தென வளர்ந்து மணப்பதனையும் உருளைக் கிழங்கு எனத் திரண்டு இனிப்பதனையும் கண்ட எவனேனும் குப்பையைக் குப்பை என்று ஒதுக்க முடியுமா?



208356

**இயற்கை வழி செயற்கை:** இயற்கையே குப்பையினை இனிய பொருளாக மாற்றுகிறது. சூரியன் காய்ந்து எரிப்பதால் குப்பையிலுள்ள பல பொருள்களும் பிரிந்து தத்தம் இடத்திற் சேர, மிகுந்த மண் மக்கி எருவாகும். இயற்கைக்கு ஓய்வு கொடுக்காமல் குப்பையைக் கொட்டிச் சாக்கடை நீரைப் பாய்ச்சினால் இயற்கை அன்னை இதனைச் சீர்திருத்த முடியாமல் திகைக்கின்றாள். தன் முறையைப் பின்பற்றுமாறு விஞ்ஞானிகளைக் கூவி அழைக்கின்றாள். இயற்கை வழியைப் பின்பற்றும் செயற்கை முறையில் மேனாட்டு விஞ்ஞானிகள் நரகமாய்க் கிடக்கும் நகரங்களை நல்லதொரு சொர்க்கமாக மாற்றுகின்றார்கள்.

**நரகம் சுவர்க்கமாதல்:** இங்கு ஒரு பெரியார் கண்ட கனவு நினைவிற்கு வருகிறது. கடவுளைப்பற்றிப் பேசுவதிலும் விஞ்ஞானத்தைப்பற்றிப் பேசி உலகினை எளிதில் வாழ வைக்க முடியுமென டின்டால் (Tyndall), ஹக்ஸ்லி (Huxley) முதலிய அறிஞர் கூறிவந்தனர். பாதிரிமாரோ இவ்வறிஞர்கள் நரகத்திற்கே போவார்கள் என வைது வந்தனர். பெரியார் ஒருவர் இவர்கள் நரகத்திற்குச் செல்வதாகக் கனாக் கண்டார்; நம்முடைய நகரம் போன்ற நரகக் காட்சியைக் கண்டார். சாக்கடை நீர் பாய்ந்த சதுப்பு நிலங்களில் வாய்க்கால் வெட்டி நீரை வெளிப் பாய்ச்சினார்கள். யார்? பாதிரிமார் பதைக்கப் பதைக்க நரகத்துக்கனுப்பிய அறிஞர்களே. நல்ல வயல்களாய் விளைந்தன. எரிவாய் நிரயத்தில் பொங்கி எரியும் பொருள்களை உருக்கி எந்திரம் பல செய்தனர். மின்சாரம் —பலபல எந்திரங்கள்—பலபல பூங்காவனங்கள் அழகு நிறைந்த வீடுகள் வளம் மிக்க வயல்கள் எல்லாம் இன்பம் கொழித்து நின்றன. சீர் கேடான இடமே தீய நரகம்.

**இளைஞர்களுக்கு:** **கடித இலக்கியம்**

## தமிழ் நாட்டின் தவச் சுடர்

## கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார்

சென்னை, திருமதி த. ந. ஆனந்தநாயகியாரின்
குழந்தைக் கெழுதியது

அன்புப் பழம் நீ நீடு வாழ்க!

அன்புக் கனியே,

பசுப் போன்ற அடக்கமும், சிங்கம் போன்ற வீறும், யானை போன்ற உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்!

புக்கர் வாஷிங்டன் போன்ற சமுதாயப் பணியும், மகாத்மா போன்ற சத்திய வாழ்வும் வேண்டும்.

இளமையென்பது ஒரு கரடு முரடான தோட்டம்; அதில் பூங்குயில்களும் அகவும்; முரட்டுப் புலிகளும் உறுமும். இளமையின் ரோஜாவில் முட்கள் அதிகம். காமப் புயல்களும் படபடப்பும் துடிதுடிப்பும் இளமையின் யாத்திரையைத் தடுத்தலைக்கும். ஆதலால், மிகவும் கவனமாக நிதானமாக அமைதியாகப் பயன் பார்த்து, நயம் பார்த்து, செய்வன செய்து வாழ்வை ஒழுங்குறுத்த வேண்டும். அவரவர் மனவுறுதியே வாழ்க்கைச் சிலையை வடிக்கும் சிற்றுளி.

வாழ்வுக்கலை திருநூலில் உள்ளது. அதைக் கற்று உளிப் பிடித்துத் தங்கள் வாழ்வை உண்மையான வீரச் சிலையாக்குக.

சிந்தை யடக்கிச் சிறுபுலனை காத்தடக்கி
விந்தை யடக்கிவளர் வீறு!

அன்பு, அன்பு, அன்பு!

**(ஒப்பம்) சுத்தானந்தம்.**

# நீலச் சிற்றாடை

(சுப்பிரமணியம்-நல்லம்மா)

மாரியன்ன வண்கைப் பாரி ஆண்ட நாடு பலவளம் மலிந்து சிறப்புடனோங்கிய பறம்பு நாடு. அந் நாட்டில் பறம்பு அரண் என்ற ஓர் காவலையுடைய அரண் உண்டு. இரப்போர்க்கு இல்லையென்னாது உள்ளது ஈந்து வான்புகழ் கொண்டான் வேள்-பாரி. அவனது பரந்த புகழின் முன் முடியுடை மூவேந்தர் புகழ் ஒளி மழுங்கிக் கிடந்தது. பொறாமையினால் உந்தப்பட்ட மூவேந்தரும் பாரியைக் கொல்ல வழி தேடி அலைந்தனர். அவனது அரணாகிய பறம்பு அரணை முற்றுகையிட்டனர். அரணின் உட்புறத்து இருந்த மக்கள் உயிர் வாழ்வதற்குப் போதுமான விளையுளை விளைவித்துக் கொள்வதற்கு ஏற்ற நிலங்களும், நீர்நிலைகளும் அங்கு அமைந்திருந்தமையின் அவர்கள் முற்றுகை பயனிலதாயிற்று.

கானகத்தில் காற்றினால் அலைப்புண்ட சிறிய முல்லைக் கொடிக்குத் தன் பெரிய தேரை நல்கியவன் பாரி என்பதை மூவேந்தரும் அறிந்திருந்தனர். வஞ்சனையினால் அவனது நாட்டைக் கவர எண்ணினர். இரப்போர்போல் வேடம் பூண்டு பாரியினிடம் சென்றனர். அவனையே பரிசாகத் தரும்படி வேண்டினர். பாரி இதனால் கலங்கினானில்லை. புலால் புறத்திடும் யாக்கையைத் துறக்க அவன் பின்னிடவில்லை. தன்னையே தானமாக ஈந்தனன். மூவேந்தரும் மிகவும் களிப்புடன் அவனைப் பெற்றனர். பெற்றும் அவனது பூதவுடம்பை அவர்களால் அழிக்க முடிந்ததேயன்றிப் புகழுடம்பை அழிக்க முடியவில்லை. அவனது ஆருயிர்த் துணைவியாகிய நங்கையும் பிரிவாற்றாது அவனைப் பின்தொடர்ந்தனள்.

**அங்கவை, சங்கவை** என்ற அவனது இரு மகளிரும் உயிர் நண்பரான கபிலரின் பாதுகாப்பில் விடப்பட்டனர். மணப்பருவம் அடைந்திருந்த அப் பெண்களுக்கு மண முடித்து வைப்பது தனது கடமையென்பதை அவர் உணர்ந்தார். அவர்களை மணந்துகொள்ளும்படி பல சிற்றரசர்களிடம் வேண்டினார். மூவேந்தருக்கும் பகைவனான பாரியின் புதல்வியர்களை மணக்க ஒருப்படுவார் யார்? மனமுடைந்த கபிலர் அவர்களைப் பார்ப்பனர் காவலில் விட்டு வடக்கிருக்கச் சென்றனர்.

இவ்வாறு இருக்கும் நாளில் மூவேந்தரிடம் பரிசில் பெறச் சென்ற ஔவையார், பாரி உயிர் நீத்ததையறிந்து மிகத் துயரமடைந்து திரும்பி வந்தார். வழியில் மழையினால் நனைந்து பாரி மகளிர் வசிக்கும் இல்லத்தையடைந்தார். அவர்களுக்கு நேர்ந்த துன்பத்திற்காக உள்ளம் வருந்தி அன்றிரவு அவர்கள் வீட்டில் தங்கினார். அப்பொழுது அம் மகளிர் இருவரும் தம்முடைய ஆடையினால் அவருடைய ஈரத்தைப் போக்கித் தீமூட்டிக் குளிர் நீக்கித் தம் இயல்பிற்கேற்றவாறு அவரை உபசாரம் செய்தார்கள். தாம் பலகாலமாகப் பேணி வைத்திருந்த **நீலச் சிற்றுடை** ஒன்றினை எடுத்து அவரை அணியும்படி வேண்டினர். அவர்களின் செயலைக் கண்ட ஔவையாரின் உள்ளம் அன்பினால் குழைந்தது. கொடையில் சிறந்து அதற்காகவே தன்னுயிரையும் தியாகம் செய்த வேள் பாரியின் மக்கள் அவர்களென்பதை அவர் உணர்ந்தார். பல அரசர்கள் பல சந்தர்ப்பங்களில் தங்களுக்கு ஔவையாரின் மீதுள்ள அன்பையும் நன்மதிப்பையும் பல வழிகளினால் காட்டியிருக்கின்றனர். அச்சந்தர்ப்பங்கள் எல்லாம் அவர் மனத்திரையில் ஓடின. அவற்றையும் பாரி மகளிரின் இச்



செய்கையையும் தம்முள்ளத்தின் நிறைந்த அன்புக்கோலால் அளந்து சமன் செய்கின்றார் ஔவையார். அவர் வாயினின்றும் பின்வருஞ் செய்யுள் எழுந்தது.

> பாரி பறித்த கலனும்; பழையனூர்க்
> காரி அன்றீந்த களைக்கோலுஞ்—சேரமான்
> வாராய் எனவுரைத்த வாய்மொழியும் இம்மூன்றும்
> நீலச் சிற்றுடைக்கு நேர்.

அன்றொரு நாள் பாரியின்பால் பரிசு பெற வந்தார் ஔவையார். அவன் அவருடன் அன்போடு அளவளாவினான். எனினும் பரிசில் கொடாது நீட்டித்தான். பலநாட் கழிந்தும் தனக்குப் பரிசில் கொடுத்து விடுக்காது பாரி மௌனமாயிருப்பதையறிந்து ஔவையார் தன்னைச் சீக்கிரத்தில் அனுப்புமாறு வேண்டினார். அதனை மறுக்கவியலாத பாரி பொற்கலன்கள் பலவற்றைக்கொடுத்து அவரைப் போகவிடுத்துச் சிலரையேவி அவற்றைப் பறித்து வரச் செய்தனன். ஔவையார் தன்னிடம் மீண்டும் வரவேண்டுமென்பதற்காகச் செய்த சூழ்ச்சிஇதுவென அறியாத அவர் அவனிடத்திற் சென்று முறையிட்டனர். பாரி இன்னுஞ் சிலநாட்கள் அவரைத் தன் மனையிலிருந்துவிட்டுப் போகும்படி வேண்டினன். பின்பு முன்னிலும் அதிகமான பரிசில் கொடுத்தனுப்பினன்.

பின்னொருநாள் பழையனூர்க் **காரி**யென்னும் வள்ளலிடம் ஔவையார் பரிசில் பெறச் சென்றிருந்தார். அவரைப் போகவிடுக்க மனமில்லாத காரி தான் கையில் வைத்திருந்த **களைக்கோல்** ஒன்றை அவர்கையில் கொடுத்து அங்குள்ள களைகள் முழுவதையும் பறித்துப் போகுமாறு வேண்டினன். களைகள் மிகுந்திருந்தமையினால் உடனே போகவியலாத ஔவையார் பலநாள் அவ்விடத்தில் தங்கிப் புறப்பட்டார்.

ஒரு நாள் சேரமானுடைய அரண்மனையில் நடைபெற்ற விருந்தில் ஔவையாரும் பங்கெடுத்துக்கொண்டார். அப்பொழுது அங்கு வந்திருந்த ஓர் விருந்தாளிக்கு இடமில்லாதிருந்தது. தனது அன்பிற்குரிய பெரு நட்பினர் பிறிதெவருமில்லாமையினால் சேரமான் ஔவையாரை நோக்கி 'ஔவையே வாராய்' என அழைத்தனன்.

இம்மூன்று செயல்களும் அன்பினின்றும் பிறந்தவையெனினும் பாரி மகளிரின் செய்கை இவற்றினும் மேம்பட்டது. தந்தையையும் இழந்து, தாயையும் இழந்து, தம் குன்றும் இழந்து, தனியராய்ப் பார்ப்பனர் மனையில் உறைந்திருந்த மகளிர் தாம் பல நாட்களாகப் பேணி வைத்திருந்த ஒரேயொரு சிற்றுடையை ஔவையாருக்கு ஈந்து மகிழ்ந்தனர். தந்தையின் பெருங்குணத்தை மக்களும் பெற்றிருந்தனர். அவர்களீந்த அந் நீலச் சிற்றுடை பாரியின் கலனுக்கும், காரியின் களைக்கோலுக்கும், சேரமான் வாராய் எனவழைத்த வாய்மைக்கும் ஈடாயிற்று. எனவே தந்தையின் கொடையிலும் மகளிரின் கொடை ஒருபடி உயர்ந்தது. கன்றுங் கனி உதவுதலை நாம் கண்டிருக்கிறோமன்றோ?

---

## தொட்டியம் திருமதி ச. பொருட்செல்வியவர்கள்

## கருத்துரை

"என் போன்ற வாலிபப் பெண்கள் மாதத்திற்கொரு 'மார்கோ' சோப்பும் மற்றவையும் வாங்கும் துட்டுக்குத் தமிழ்த் தென்றல் போன்ற திங்கள் வெளியீடு பலவற்றிற்குச் சந்தாக் கட்டி அறிவைப் பெருக்கலாம் என்பது எனது தாழ்மையான எண்ணம்"


**ஸ்ரீ பால ஷண்முகானந்த நாடக சபா**
**(1925ல் நிறுவியது)**

நாடகமேடை வாயிலாக நாட்டுப் பணியாற்றி வரும்
**டி. கே. எஸ். சகோதரர்களின் கலைக் கழகம்**

**மூன்றாண்டுத் திட்டம்**

உயிரோவியம்—நாரண துரைக்கண்ணன்
அவள் விபசாரியா!—சேதுராமன்
புயல்—அகிலன் வீரப்பெண்—ரங்கசாமி
ராஜராஜ சோழன்—ராமநாதன்
பண்டைத் தமிழகம்—சண்முகம்
சேரன் செங்குட்டுவன்
?

புதிய தமிழகத்தை உருவாக்கும் அரிய சித்திரங்கள்!

இடம்: திண்டுக்கல். டி. கே. எஸ். சகோதரர்கள்
15—8—'47. உரிமையாளர்கள்

**இந்தியன் சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**


தலைமை ஆபீஸ்:
104, வரதமுத்தையப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் முக்கிய ஊர்களில் செல்வாக்கு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு தலைமை ஆபீசுக்கோ அல்லது கீழ்க்கண்ட விலாசத்துக்கோ எழுதவும்.

G. D. குருசாமி,
இன்ஸ்பெக்டர்,
குருசாமி பிள்ளை தெரு, திண்டுக்கல்.

## விருதுநகர் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்

பௌண்டர்ஸ் & மெக்கானிக்ஸ்,
வெல்டர்ஸ் ஆர்க் & கேஸ் வெல்டிங், **விருதுநகர்.**



நாங்கள் கீழ்க்கண்ட சாமான்கள் உற்பத்தி செய்கிறோம்.

1. ஆயில் ரோட்டரி செக்
2. ரைஸ் ஹல்லர் & புலோர்மில்ஸ்
3. அக்ரிகல்ஸர் பம்பு செட்
4. காபி கிரைண்டர்
5. காபி பாலிஷர்
6. எல்லாவித மிஷினரி பார்ட்ஸ்
7. வார்ப்பு படிக்கல்களும் (56, 28, 14, 7)
8. மோட்டார் கேஸ் பிளாண்ட் காஸ்டிங்ஸ்
9. கீல், உருண்டை, தாப்பாள் முதலியன.

ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும்.

## ஜெனரல் மெட்டல் டிரேடிங் கம்பெனி,

ஞ்சினியரிங் ஒர்க்ஸ் & இண்டஸ்டிரியல்ஸ், **கோவில்பட்டி.**

நாங்கள் எல்லாவிதமான போல்ட் & நட்ஸ்களும் ரிவிட், ஸர் முதலியன உற்பத்தி செய்கிறோம்.

ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும்.

## லைட் ஹவுஸ் போட்டோ ஸ்டுடியோ

உயர்தர படம் எடுக்குமிடம்.

**லைட்ஹவுஸுக்கு விஜயம் செய்யுங்கள்!**
(காளிமார்க் சோடா கம்பெனிக்கு அடுத்த கட்டடத்தில்)
ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.
M. P. முகம்மது, புரோப்ரைட்டர்.


# தாரையின் தந்திரம்

*[அ. டி. வீரபத்திரபிள்ளை]*

கப்பல் விற்றுக் கெட்ட குடியைக் கொட்டை நூற்று வாழ வைத்ததுபோல, ஒரு செட்டியார் தம் நிலைமை அடியோடு கெட்டுப் பலசரக்குக் கடையொன்று வைத்தார்.

காலையில் கடையை அடைந்த செட்டியார் பட்டறையிலிருந்து கொண்டு தமக்குள் பேசிக்கொள்கிறார்: "இன்று வீட்டை விட்டுப் புறப்படும்போது அழகிய சுமங்கிலியொருத்தி மலர்ந்த முகத்துடன் எதிரில் வந்தாள். நல்ல சகுனந்தான். இன்று அதிக இலாபம் கிடைக்கும்!"

செட்டியார், கணக்குப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது, ஒரு வயதுமுதிர்ந்தவர்—வைதிகர் தலையில் பெரிய பொட்டணம் ஒன்றைச் சுமந்துகொண்டு செட்டியார் கடை முன் தெற்கும் வடக்குமாகப் பலதடவை உலவிக்கொண்டிருந்தார். செட்டியார் அவரைப் பாராததுபோல் கணக்குப் புத்தகத்தையே புரட்டிக்கொண்டிருந்தார். பெரியவர் சிறிது நேரம் கழித்து, அக்கடை முன் போடப்பட்டிருந்த நீளப் பலகையில் ஒருபக்கம் வந்து உட்கார்ந்தார்.

"ஐயா! தாங்கள் வெகு நேரமாக இங்கு இருக்கின்றீர்களோ? நான் கணக்கில் சில விவரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன சாமான் வேண்டும்?"

"சாமான் ஒன்றும் வேண்டாம். நான் காசிவரையில் போய்வரவேண்டியிருக்கிறது. என்னிடத்தில் 500 ரூபாய் இருக்கிறது. அதை யாராவது நம்பிக்கையுள்ள ஒருவரிடம் ஒப்புவித்துப் போக எண்ணம். தாங்கள் அந்தப் பொறுப்பைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டும்"

செட்டியாருக்கு இதைக் கேட்டதும் மனத்தில் அதிக மகிழ்ச்சிதான். 'வரும்போதே நல்ல சகுனம்; பயனில்லாமலா போய் விடும்? பெரியவர் பண முடிச்சுக் கொண்டு வந்திருக்கிறார்' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். பிறகு பெரியவரை நோக்கி "நீங்கள் சொல்வது சரிதான்; எனக்கு ஏன் இந்தப் பொறுப்பு? 'இன்றைக்கிருந்தாரை நாளைக்குஇருப்பார் என்று எண்ணவோ திடமில்லை' என்ற உண்மையை நன்றாய் அறிவோம். 'நெருநல்உளன் ஒருவன் இன்றுஇல்லை என்னும் பெருமையுடைத்து இவ்வுலகு' என்கிறது தமிழ் வேதம். ஆகையால் தாங்கள் ஏதாவது ஒரு பாங்கியில் போட்டுவைக்கிறதுதானே" என்றார் செட்டியார்.

பெரியவர் 'அநேகம் பாங்கிகள் திடீரென்று முறிந்து விடுகின்றன' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஒரு பெண் பெட்டியில் நாலணாப் போட்டுக்கொண்டு வந்து 'வழக்கம்போல் சாமான் கொடுங்கள்' என்று கடைப் பையனிடம் கொடுத்தாள். அப் பையனும் வழக்கம் போல் சாமான்களைப் போட்டுக் கொடுத்தான். உடனே செட்டியார் பெட்டியை வாங்கிப்பார்த்து, "அடே! சின்னப்பயலே! இதென்னடா மோசம்! எனக்கு நீ இலாபம் தேடியது போதும்; இன்னும் ஒரு மடங்கு கூட வை" என்றார். பையனும் வைத்துக்கொடுத்தான். பெண்ணும் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். இதைப் பார்த்த பெரியவர், செட்டியாரை மகா யோக்கியராக மதித்தார்.

சாமான் வாங்கிச் சென்ற பெண், தன் எசமானியிடம் அதைக் கொண்டுபோய்க் கொடுத்தாள். அவள் ஒரு தாசி— பெயர் 'தாரை'. "இது என்ன! வழக்கத்துக்கு மாறாக இரு மடங்கு இருக்கிறது! இதன் உண்மை தெரியவில்லையே!" என்று சொல்லி வேலைக்காரியிடம் அதனைத் திரும்பக் கொடுத்துவிட்டாள். அவள் கடைக்குப் போய், "ஐயா!



தாரை அம்மா சாமான்களைப் பார்த்தார்கள்; அதிகமாய் வைத்திருக்கிறதாம்; அவர்கட்குப் பிறர் பொருளில் ஆசை கிடையாது; அதிகமாய் வைத்ததை அள்ளிக்கொள்ளும்படி பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டார்கள்" என்றாள்.

இதைப் பார்த்தார் பெரியவர்! செட்டியாரோ ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார். 'இந்தப் பெண்ணின் எசமானியோ பிறர் பொருளில் ஆசையில்லாதவளாய்த் தெரிகிறது. அவளிடம் கண்டு பேசுவோம்' என்று எண்ணி அவ்வேலைக்காரியைப் பின்பற்றினார்.

செட்டியார் ஏமாற்றம் அடைந்தார். சகுனத்தின்மேல் குற்றமில்லை; எதிரே வந்த பெண்ணின் இடுப்பிலிருந்த குழந்தை அழுதுகொண்டேயிருந்தது; அதனால்தான் கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது எனச் சொல்லிக்கொண்டார்.

பெரியவர், தாரையின் வீட்டில் நுழைந்தார். அங்கே நின்ற தாரை, 'இது வேசியின் வீடல்லவா? சிவ வேடம் பூண்ட தாங்கள் இங்கு வந்தது வியப்பாயிருக்கிறதே' என்றாள். அவர் தம்கருத்தைத் தாரையிடம் தெரிவித்தார். அதுகேட்ட தாரை, அவர் முன் பண ஆசை இல்லாதவளைப்போல் நடிக்க நினைக்கிறாள்.

அவ்வேளையில் ஒரு சாமியார் பிச்சைக்கு வந்தார். பத்திச் சுவை ததும்பும் பல பாடல்களை மிக உருக்கமாகப் பாடிக்கொண்டு நின்றார். தாரை தன்னுடைய தயாளகுணம் தெரியும்படி கால் ரூபாயைச் சாமியார் திருவோட்டில் போட்டாள். சாமியார், "அம்மா! பட்டினத்தார், பணத்தை 'ஆட்கொல்லி' என்று சொல்லியிருக்கிறார்; நான் அதைத் தொடவே மாட்டேன்; தாங்கள் அதை எடுத்துக்கொள்ளுங்கள்; கொஞ்சம் அரிசிபோட்டால் போதும்" என்றார்.

இந்தக் காட்சியைக் கண்டார் பெரியவர். இவள் நல்லவளாய்த்தான் காணப்படுகிறாள். இருந்தாலும் தாசி தானே. இந்தச் சாமியாரைப் பார்த்தால் முற்றுந்துறந்த முனிவராகத் தோன்றுகிறார் என்று தம்முள் நினைத்துக் கொண்டு மெதுவாக அவ்வீட்டைவிட்டு நீங்கி சாமியாரைப் பின்தொடர்ந்து சென்றார். சாமியார் ஊருக்குப் புறம்பேயுள்ள ஒரு மடத்தில் போய்த் தங்கினார். பெரியவர் அம் மடத்தையடைந்து, சாமியாருக்கு ஒரு கும்பிடு போட்டார். சாமியார் அவரை நோக்கி, "ஐயா! நீங்கள் அந்த அம்மணி வீட்டில் இருந்தவர்தானே? இங்கு எதற்கு வந்தீர்களோ" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

பெரியவர், சாமியாரிடம் தமது எண்ணத்தைத் தெரிவித்தார். "ஐயையோ! இது என்ன! என் நிலைமை தெரியாதா? அந்த அம்மாள் போட்ட கால் ரூபாயையே கையாலும் தொடமாட்டேன் என்றேனே! ஐந்நூறு ரூபாயாவது? நான், வைத்துக்கொள்வதாவது? நம்மால்முடியாது; தாங்கள் தயவுசெய்து வேறு யாரையும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று வெறுப்போடு பேசினார்.

பெரியவர், "சுவாமி! தங்களிடத்தில்தான் எனக்கு முழு நம்பிக்கை ஏற்படுகிறது; எவ்விதத்திலும் தாங்கள் அருள் செய்ய வேண்டும்" என்று பணிவுடன் கூறினார். "உங்களுக்கு விருப்பமானால் இந்த மடத்தில் ஒதுக்கமான ஓரிடத்தில் ஆழமான குழி தோண்டி அப் பணத்தைப் புதைத்து வைத்துப் போங்கள்; பின் நீங்களே வந்து எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார் சாமியார். பெரியவரும் 'சரி' யென்று சொல்லி அவ்விதமே செய்து சாமியாரிடம் விடை பெற்றுச் சென்றார்.



பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி மூர்த்திதரிசனம் செய்து திரும்பி வந்து சாமியாரிடம் விபூதி முதலான பிரசாதங்களைக் கொடுத்து வணங்கித் தம் பிரயாண வரலாறுகளைப்பற்றி ஆனந்தமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்துப் பணத்தைப் புதைத்து வைத்த இடத்தில் போய் ஆழமாய்த் தோண்டியும் பணத்தைக் காணாமல் மனம் பதைபதைத்தார். சாமியாரிடம், வைத்த இடத்தில் பணத்தைக் காணவில்லையே எங்கே? எங்கே? என்று துடியாய்த் துடித்தார். சாமியார், "நான்தான் அன்றே சொன்னேனே! இந்தத் தொந்தரவுகள் எல்லாம் எனக்கு எதற்கு? வீணாக என் பெயரைக் கெடுத்து விடாதீர்" என்று சீறிவிழுந்தார்.

பின் பெரியவர் செட்டியாரிடம் சென்று நிகழ்ந்ததை யெல்லாம் விவரமாய்ச் சொன்னார். அவர், "என்னை நம்பாமல் ஏமாற்றினதற்கு இதுவும் வேண்டும் இதற்குமேலும் வேண்டும்" என்று சொல்லிப் பரிகசித்தார். பெரியவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உள்ளங் கலங்கினார்; பெருமூச்செறிந்தார். இறுதியில் பெண்கள் சமயோசித புத்தியுடையவர்கள்; அதிலும் தாரை சாமர்த்தியசாலியாக இருப்பாள் என்று எண்ணினார். அவள் வீட்டை நோக்கி நடந்தார். வாட்டத்துடன் அவள் முன் சென்று அமர்ந்தார். விவரமாய் நடந்ததைச் சொன்னார்.

அவள் சிரித்துக்கொண்டே, "பயப்படாதீர்கள்; நான் ஒரு தந்திரம் செய்கிறேன்; பணம் கிடைத்துவிட்டால் எனக்கு என்ன தருவீர்கள்" என்றாள். நூறு ரூபாய் தருவதாக உறுதி கூறினார் பெரியவர்.

தாரை சுமார் ஐயாயிரம் ரூபாய் பெறக்கூடிய வைர நகைகளை அணிந்துகொண்டு சாமியார் மடத்தை அடைக்

தாள். சாமியார்பாதத்தில் விழுந்துபணிந்தாள். "சுவாமி! அடியாள் ஒரு விண்ணப்பம்; என்னை ஆதரித்து வந்தவர் தஞ்சாவூரில் இறக்கும் தறுவாயில் இருக்கிறார்; நானும் வேலைக்காரியும் போகிறோம்; வீட்டில் ஒருவரும் இல்லை; இந்நகைகளை அணிந்துகொண்டு சென்றால் அங்கு இருப்பவர்கள் பிடுங்கிக்கொள்வார்கள். ஆகையால் இவற்றைத் தங்களிடம் கொடுத்துவிட்டுப் போய்வருகிறேன்; வந்ததும் பெற்றுக்கொள்கிறேன்" என்றாள்.

சாமியார் உள் உவகையுடன், வெறுப்பவர் போலப் பேசத் துவங்கினார். "அம்மம்மா! எனக்கு வேண்டாம் இந்தத் தொல்லை; காசிக்குப் போய் வந்த பெரியவருடன் இவ்வளவு நேரம் பெரிய கேலியாய்விட்டது. அவரை ஒருவாறு ஓதுக்கி விட்டேன்; அதற்குள் நீயும் வந்து விட்டாயே" என்றார் சாமியார்.

"அவர் புதியவர்; தங்களைத் தெரியாதவர்; நானோ தங்களை நன்கு அறிந்தவள்; எனக்கு விலக்குக் கொடுத்து ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பணிவுடன் பரிந்து வேண்டினாள் தாரை.

"உன்னுடைய விருப்பம் அதுவானால் நீயும் ஒரு பக்கத்தில் புதைத்துச் செல்; பிறகு என்மேல் வருத்தப் படக்கூடாது; நீ அடைக்கலமாய்க் கொடுக்கிற பூமிதேவி தான் பொறுப்பு" என்றார் சாமியார்.

அவள் உடனே ஒரு துணியை விரித்து ஒவ்வொரு நகையாய்க் கழற்றி வைக்கிறாள். அப்போது பெரியவர் அங்கு வந்தார்.

அவரைக்கண்ட சாமியார், அதோ வந்துவிட்டாரே அந்தப் பெரியவர்; என்ன பரிதாபம்! இவர் புதைத்து



வைத்த பணத்தைக் காணவில்லையாம்; அதற்கு நானா பழி? பூதந்தான் விழுங்கிவிட்டதோ அல்லது எந்தப் பக்கத்தில் தேடினாரோ..............இந்தப் பக்கத்திலும் தோண்டிப் பார்க்கிறதுதானே" என்றார்.

சாமியார் குறிப்பிட்டஇடத்தில் பெரியவர் தோண்டிப் பார்த்தார். பண முடிச்சுக் கிடைத்தது. மனமகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டே நின்றார் பெரியவர்.

அந்நேரம் தாசி வீட்டு வேலைக்காரி வேகமாக ஓடி வந்தாள். "அம்மா! அம்மா! தந்தி வந்திருக்கிறது; தஞ்சாவூரில் ஐயா இறந்துவிட்டார்களாம்" என்று பரபரப்புடன் சொல்லி நின்றாள். அப்படியா! என்று அவளும் சிரித்துக்கொண்டே கழற்றிய நகைகளைத் திரும்பவும் அணிந்துகொண்டாள். சாமியாரும் சிரித்தார். பெரியவர் பணம் கிடைத்துவிட்டது என்று சிரிக்கின்றார். 'எப்படி நான் செந்திரம்?' என்று சொல்லிச் சிரித்தாள் தாரை. 'அடிகளின் ஆனந்தத்திற்கு காரணம் என்னவோ?' என வினவினாள். 'நானா! ஏமாந்தேனே என்று சிரித்தேன்' என்றார் சாமியார்.


— தமிழகத்திலே —
சமுதாயம், குடும்பம், பெண்கள் நிலை,
தொழிலாளர் உரிமை—கடமை, எவ்வாறு
அமைய வேண்டுமென்பதைச் சித்திரிக்கும்
— சிறுகதைகள் —
சுவைமிக்க செந்தமிழ் நடையில்
மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்!
அழகிய கதைகள் சிறந்த பரிசு பெறும்.

# 'யாழ் நூல்' கண்டார் பிரிவு!

**தோற்றம்: 29-3-1892. :: மறைவு: 19-7-1947.**

ஐயகோ கொடிதே, ஐயகோ பிரிவே;
வையகந் தன்னில் வாழ்வுறத் தமிழர்
பைய நினைத்த பயனுறு போழ்தே,
ஐயமில் மொழியால் வையம் வணக்கும்

துறவியாய்த் **தமிழர் அறநிலை** பேணிப்
பிறங்கிட இதழில் பிறர்சூழ் வறுத்து,
மறந்தநம் பழங்கலை திறந்து காட்டிப்
பன்னாள் கருதி இன்னியல் **'யாழ்நூல்'**
என்னும் இறவா நன்னூல் உதவிய

எந்தம் **விபுலாநந்த** எந்தல்
அடங்கினர் உயிரென மடங்குமென் உள்ளம்;
சித்தங் களிப்பூட்(டு) அத்தன் உரையை
நித்தங் கேட்ட வித்தகர் என்னுறார்?
மறைந்ததே தமிழர் மரபின் திருவுரு?

நேரிய மொழிகொடு சீரிய அறிவுரை
உரைக்கும் போழ்தில் உலுத்தர் மறுப்பினும்
அமைந்த முறுவல்பூத்(து) அணைக்குஞ் சொல்கொடு
பேரியல் துறவி நேரியாம் காண்பமோ!
மாணவ ரேம்யாம் ஆணங் காட்டினேம்

அன்னவர் உயிரின் பின்னர் எகிலேம்!
கரந்தையில் உறைதல் காசெனத் தெளிந்து
**காளிகட்** டம்செல் நாளதில் எடுத்த
புகைப்படக் குழுவில் தகையில் சிறுவனேன்
நிகராய் அருகமர் நிலைக்கு நாணிட

என்னிலை யுன்னித் தன்னியல் முறுவலொடு
"தாடிகொள் ஆசா மியாகிய நீவிர்
தாடியில் என்னினுந் தகைமிக வுற்றீர்;
நாடி நோக்குக நான்மிகச் சிறுவன்;
மழவென முகத்தை மழித்துளேன்; மறுகேல்.

தாடியிற் சாமிநீர், தாடியில் சாமிநான்
தரு(க)இவண்" எனவுரைத் தருகிருத் துவந்ததை
மறக்க இயலுமோ மாண்புறு **பண்பை!**
என்று காண்பேன்? எங்கியான் காண்பேன்?
நின்றுளேன் யானுங் கன்றிய மனத்தனேன்!

இனியே,
தமிழரே கேளீர்! இமிழ்கடல் வரைப்பில்
எம்மொழி யாளரும் செம்மையாம் நங்கலை
ஏற்றிட வாழ்க்கையில் வேற்றவா இன்றியே
திறம்பெற வுழைத்த தீரனை இழந்தீர்;

தமிழிசை யழித்த தருக்கர் செயலற
அடிகள் செய்த ஆன்ற முயற்சியைப்
படிதனில் நாளும் பாங்குறத் தொடர்ந்து
அழியா நடுகல் ஒழியா தமைப்பீர்!
**விபுலாநந்த** விமலனை இழந்த

தமிழகத் தீரே தாழ்வில்
நிறைகலை இழந்த நிலவா னீரே!

*திணை—பொதுவியல்; துறை—கையறுநிலை;*

*முத்துத் துஞ்சிய* **பண்டித மயில் வாகனர்—அருட்டிரு.**
**விபுலாநந்த அடிகளைப்** புதுவை மீனவன் பாடியது

## செய்திக் கோவை

### விருதுநகர், : செந்திக்குமார நாடார் கல்லூரி

சர்வசித்து ஆடி உகூ-ம் நாள் (11–8–’47) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு, விருதுநகர் நாடார் குலப் பெருமக்கள் நன்முயற்சியாலும், பெருங்கொடை வள்ளல் மு. ச. பெ. செந்திக்குமார நாடாரவர்கள் பெருங்கொடைத் திறத்தாலும், இராமநாதபுரம் ஜில்லாக் கலெக்டர் திருவாளர் C. விவேகாநந்தமூர்த்தி பீ. ஏ. அவர்கள் தலைமையில் பச்சையப்பன் கல்லூரித் தலைமைப் பேராசிரியரும் ..ருளாதார நிபுணருமான உயர்திரு B. V. நாராயணசாமி நாயுடு M. A., Ph. D., B. Com., Bar-at-law அவர்களால் பெருமுழக்கமாகத் திறந்துவைக்கப் பெற்றது. பிரின்ஸிபால் திருமிகு ஜோசப் பிராங்கோ எம். ஏ., எல். டி. கல்லூரி 20–8–’47 முதல் முழுஆற்றலுடன் வேலைசெய்யும் என்று கல்லூரிச் செயலாளர் அன்புடன் அறிவிக்கிறார்கள்.

### விருதைத் தமிழ்க் கழகம்—பதினேழாவது மன்றம்

சர்வ. ஆடி சு-ம் நாள் (20–7–’47)ல் காரைக்குடி, உயர்திரு சா. கணேசன் அவர்கள் பேரவைத் தலைமையில் பேராரவாரத்துடன் நடைபெற்றது.

**பதினெட்டாவது கலைமன்றம்:—** சர்வசித்து ஆவணி உஉ-ம் நாள் (7–9–’47) ஞாயிற்றுக்கிழமை, திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரிப் பேராசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைமையில் நடைபெறும். கலைப் போட்டிப் பொருள்: சிறுவர்சிறுமியர்—தந்தைதாய்ப்பேண்; மாணவர்—புறங்கூறாமை; மாணவிகள்—பெண்களும் உத்தியோகத் துறையும்; மாணவியல்லாதார்—குடும்பம்.

# அசையாத் தமிழ்

[திரு எஸ். எஸ். அருணகிரிநாதர்]

எத்தனை எத்தனை மொழிகளெலாம்
எங்கும் நிறைந்தே இருந்திடினும்
அத்தனை மொழிக்கும் மேலாக
அமைந்து வளர்ந்த செந்தமிழே!

வள்ளுவ ருடனே பலபுலவர்
வளமுற வளர்த்த செந்தமிழே!
தெள்ளிய கலைகள் பலப்பலவும்
திகழும் எங்கள் தேன்தமிழே!

திராவிட நாட்டு மொழிகளெலாம்
தோன்றிடச் செய்த தமிழ்மொழியே!
அராவிடம் போன்ற அயல்மொழிகள்
அசைக்கவும் அசையாத் தனிமொழியே!

வாழ்வாய் உலகினில் தமிழ்மொழியே
வளர்கலை யுடனே வளமுடனே
வாழ்வாய் எங்கள் தமிழ்மொழியே
வளர்க எங்கள் தமிழ்மொழியே!

---

### பெருந் தமிழ்ப் புலவர் பிரிவு

மதுரைத் தமிழ்ச் சங்கக் கல்லூரித் தலைமைப் பேராசிரியரும் பண்டிதர் பலரைப் படைத்த 'பண்டித சிகாமணியுமாகிய உயர்திரு. திருநாராயணையங்காரவர்கள், சர்வசித்து ஆடி உஉ (7—8—’47)ல், திருநாடலங்கரித்தமை கேட்டுப் பெருந்துயருறுகிறோம்.

# உரையாணி

**அழகு:—** (மாதப் பத்திரிகை) தமிழர் தலைமணியாகிய நாவலர்—பாரதியாரின் திருவுருவந் தாங்கி 'அழகு' வந்தது. கண்கவர் அழகு தந்தது; கருத்துக் கவர் கட்டுரையழகும் தந்தது. பொதுநிலை பேணித் தமிழர் தன்மானங் காக்கும் தமிழ்த் தாளைத் தமிழர் வரவேற்பதில் தடை யாது? மதிப்பாசிரியர்: திரு. இராமமீனாட்சிசுந்தரனார் எம். ஏ. 289, தம்புச் செட்டித் தெரு, சென்னை—விலை அணா 4.

**கலை மலர்:—** (மாத இதழ்) கலைமலர் கலைமலராகவே விளங்குகின்றது. ரோஜா தரும் பொருளாதாரக் கட்டுரையும் இன்னும் பலதிறக் கட்டுரைகளும் பரிமளிக்கின்றன. கலைப்பித்தன், கலைமலர், புதுக்கோட்டை—விலை அணா 8.

**தமிழ்க்கலை:—** மறைந்திருந்த 'தமிழ்க் கலை' மீண்டும் வருகிறது. ஆசிரியர் பரமசிவானந்தம் பரந்த தமிழறிஞர்; சிறந்த பேச்சாளர்; நுண் கருத்தாளர். அவரது பத்திரிகையும் பல நலங்களால் பொலிவது இயல்பே! மாத வெளியீடு, விலை அணா 4. 34, வைத்தியநாத முதலி தெரு, சேற்றுப்பட்டு, சென்னை.

**பாரதசக்தி:—** புதுச்சேரித் தமிழ் முனிவர் அருட்டிரு சுத்தானந்த பாரதியின் கருணை முழுதும் நிரம்பிய 'பாரத சக்தி'க்கு அருளுண்டு, பொருளுண்டு; சீருண்டு, சிறப்பும்



உண்டு. அழகிய எழுத்தோவியங்கள் மிளிர்கின்றன பாரதசக்தி—புதுச்சேரி, விலை எட்டணா. (மாதப்பதிப்பு

**சிலப்பதிகாரமும் தமிழரும்:—** (ஆசிரியர்: தமிழர் தலைவர், ம. பொ. சிவஞானக் கிராமணியார்.) ஆராய்ச்சி நூல். கண் மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போகக் கலைக்கண் கொண்டு கற்பனை நிரம்பிய காப்பியங்களைத் தமிழ்ப் புலவர் ஆராய்தற்கு வழிகாட்டும் அழகிய சிறு நூல். சிலப்பதிகாரத்தில் ஆசிரியர் அரசியலுள்ளத்துடன் துளைந்து திளைத்து மூழ்கி எடுத்த முழுமணிகள் ஒளி வீசுகின்றன! விலை அணா 8. இன்பநிலையம்—தியாகராயநகர் சென்னை 17.

**கவிதைக் கதம்பம்:—** புதுவயல், ஆசிரியர் ஜீவனது செந்தமிழ்ப் பாடல்களின் தொகுதி. சிறுவர் சிறுமியர் தித்திக்கப் பாடுவதற்கேற்ற இனிய நடையில் அழகாகப் பாடல்கள் அமைந்துள்ளன. கதம்ப மணம் நன்கு கமழ்கின்றது. விலை ரூ. 1-6-0. இந்திரா நிலையம், புதுவயல், இராமநாதபுர மாவட்டம்.

**இந்து சட்டத் தொகுப்பு:—** சென்னை முன்னாள் அமைச்சர் வழக்கறிஞர் திருமிகு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழி பெயர்ப்பு. இந்துச் சட்டத்தின் முக்கிய பகுதிகளான வாரிசு, சொத்துரிமை, திருமணம், சுவீகாரம் பற்றிய சட்டங்களை எங்ஙனம் திருத்துதல் வேண்டும்? தமிழர் பண்பாட்டுக்கு ஒத்த முறையில் எவ்வாறு அமைதல்வேண்டும்? என்று அறிந்து ஆவன செய்வதற்கு வழிகாட்டும் நூல். விலை அணா 6. தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தார், 8, நம்மாழ்வார் தெரு, ஜி. டி. சென்னை.

---

# தமிழ்த் தென்றல்

(மாதப் பத்திரிகை)

## ஆண்டுக் கட்டணம்

| | |
|---|---|
| உள் நாடு | ரூ 3—0—0 |
| வெளி நாடு | ரூ 3—12—0 |

## தனி இதழ்

| | |
|---|---|
| உள் நாடு | ரூ 0—4—0 |
| வெளி நாடு | ரூ 0—5—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் ஐந்தணு தபால்தலை அனுப்புக!

★

## விளம்பர விகிதம்-ஒரு தடவைக்கு

| | |
|---|---|
| அட்டை பின்புறம் | ரூ 100 |
| ,, உட்புறம் | ரூ 75 |
| புத்தகம் உள் ஒரு பக்கம் | ரூ 50 |
| அரைப் பக்கம் | ரூ 25 |

நீடித்த கால விளம்பரங்களுக்குக் கூலி மலிவு!


பிற விபரங்கட்கு எழுதித் தெரிந்து கொள்க.

★

தமிழ்த் தென்றல் அலுவலகம்,
நீர்க்கடைத் தெரு, விருதுநகர்.

208356

# JEEVAT
# ஜீவா தா!



ஜீவசத்துப் டே
நிறைந்த உன்னத
ஆகாரம். மெனரல்ஸ்,
சியம், பாஸ்பரஸ், அய
வைட்டமின்:- A. B
முதலிய சத்துக்கள் நிறை
ஹேமோக்ளோபின்
globi ) என்ற விசே
சத்து அடங்கியிருக்கிறது.
தைகளின் ஆரோக்
கத்திற்கு மிகவும் அவசி
ருசிமிக்க ஆகாரம்!

சம பார்வையுள்ள கண்கள்,
இரத்த புஷ்டி, தேக வளர்ச்சி,
ரசு மறுவற்ற தோல், பல் எலும்பு
உறுதி, சுகமான மலக்கழிவு,
குந்த குளிர்ச்சி முதலிய விசேஷ
குணங்கள் தருவது!



உபயோகிக்கும் முறை:- சாதாரண
அவலைப்போல, தண்ணீரிலாவது,
பாலிலாவது நன்ருக நனைத்து
சாப்பிடலாம்.

தயாரிப்பவர்கள்:-

**ராஜன் இண்டஸ்ட்ரியல் ஒர்க்ஸ், விரு**
(பிரபல நல்ல உணவு தயாரிப்பவர்கள்)



வெளியிட்டோர்: வே. வ. இராமசாமி, தமிழ்த் தெ றல் அலுவல
அச்சிட்டோர்: நட. சதானந்தம், சதானந்தா அச்சகம், விருதுநக
ஆசிரியர்: வே. வ. இராமசாமி, விருதுநக